நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## விதை விதைக்கும் கருவி மூலம் முன்பருவ விதைப்பு

ராமநாதபுரம் மாவட்டத்தில் ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் விதை விதைக்கும் கருவி மூலம் முன்பருவ விதைப்பு செய்திட அனைத்து ஏற்பாடுகளும் நடந்து வருவதாக வேளாண்மை இணை இயக்குநர் கு.சௌந்தர்ராஜன் வியாழக்கிழமை தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியது:

ராமநாதபுரம் மாவட்டத்தில் சாகுபடி செய்யப்படும் 1.30லட்சம் ஹெக்டேர் நெல் பரப்பில் ஏறத்தாழ 95 சதவீதம் வடகிழக்கு பருவ மழையை நம்பி, முன்பருவ விதைப்பாக விதைக்கப்படுகிறது. மானாவாரி நெல் சாகுபடியில் நெல் உற்பத்தியை பெருக்கிட விவசாயிகளுக்கு பல்வேறு சாகுபடி தொழில் நுட்பங்களை தெரியப்படுத்தி வருகிறோம்.

மானாவாரி முன்பருவ விதைப்பில் விதை விதைப்புக் கருவி மூலம் நெல் விதைகளை முன்பருவ விதைப்பு செய்யலாம்.

ஆட்சியரின் அறிவுரையின்படி ராமநாதபுரம் மாவட்டத்தின் முன்பருவ விதைப்பாக நெல்சாகுபடி பரப்பில் ஆயிரம் ஹெக்டேர் பரப்பு விதை விதைக்கும் கருவி மூலம் நெல் விதைப்பு செய்திட அனைத்து ஏற்பாடுகளும் நடந்து வருகின்றது.

சாதாரண நெல் விதைப்பில் ஏக்கருக்கு 30 கிலோ நெல் விதைகள் தேவைப்படுகிறது.

ஆனால் விதை விதைக்கும் கருவி மூலம் விதைத்தால் 16லிருந்து 20 கிலோ விதைகள் போதுமானது. கருவி மூலம் விதைப்பதால் பயிர்களின் எண்ணிக்கையை தேவையான அளவு பராமரிப்பதோடு கூடுதலாக 15 சதவீதம் முதல் 20 சதவீதம் வரை மகசூலும் கிடைக்கிறது.

கடந்த ஆண்டில் திருவாடானை,பரமக்குடி,ஆர்.எஸ்.மங்கலம் மற்றும் போகலூர் வட்டாரங்களில் நெல் விதைகளை முன்பருவ விதைப்பு செய்த விவசாயிகள் கூடுதல் மகசூல் கிடைக்கப் பெற்றனர்.

எனவே இந்த சாகுபடி தொழில் நுட்பத்தை அனைத்து விவசாயிகளும் பின்பற்றி மானாவாரி நெல் சாகுபடியில் அதிகஅளவு நெல் உற்பத்தி செய்து பயனடைந்திட விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

விதை விதைக்கும் கருவி செயல்படும் விதம் குறித்து அனைத்து வட்டாரங்களிலும் 50 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளது என வேளாண்மை இணை இயக்குநர் கு.சௌந்தர்ராஜன் தெரிவித்தார்.

---

## வறட்சியால் காய்ந்த தென்னை மரங்கள்: கொப்பரை விலை கடும் உயர்வு

இரண்டு ஆண்டுகளாக நிலவிய கடும் வறட்சியால் தென்னை மரங்கள் காய்ந்துவிட்டதால் கொப்பரை விலை கிலோ ரூ. 58ஆக உயர்ந்துள்ளது.

கோவை மாவட்டத்தில் சுமார் 2.75 லட்சம் ஏக்கர் பரப்பளவில் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. பெரும்பாலும் பொள்ளாச்சி, ஆனைமலை பகுதிகளில் அதிக அளவில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது.

நிலக்கடலை, பருத்தி, நெல் உள்ளிட்ட பயிர்கள் இப்பகுதிகளில் கடந்த பல ஆண்டுகளுக்கு முன் அதிக அளவில் பயிரிடப்பட்டிருந்தன. ஆனால் அதிகரித்த கூலி ஆள் பற்றாக்குறை, தண்ணீர் தட்டுப்பாடு ஆகியவை காரணமாக பெரும்பாலான விவசாயிகள் தென்னந்தோப்புகளை உருவாக்கினர்.

இந்தச் சூழ்நிலையில் கடந்த இரண்டு ஆண்டுகளாக நிலவிய கடும் வறட்சியால் சுமார் 1.75 லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்தவற்றில் பாதிக்கு மேற்பட்ட தென்னை மரங்கள் வறண்டுவிட்டன. மீதியுள்ள மரங்களும் காய்க்கும் திறனை இழந்துவிட்டன.

பொதுவாகத் தென்னை மரங்களில் ஜனவரி முதல் ஜூன் மாதம் வரையில் தான் தேங்காய் அதிக அளவில் காய்க்கும். அந்த நேரத்தில் தேங்காய் விலை குறைவாக இருக்கும். ஜூலை முதல் டிசம்பர் வரை தேங்காய் வரத்துக் குறைவாக இருக்கும். இதனால் தேங்காய் விலை பொதுவாகச் சற்று உயரும்.

ஆனால், தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக நிலவிய கடும் வறட்சியால் தென்னை மரங்கள் வறண்டு வருவதால் இந்த ஆண்டு தேங்காயின் விலையும் அதிகரித்துள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு வரை தேங்காய் கொப்பரை கிலோ ரூ. 40 முதல் ரூ. 43 வரை இருந்தது. ஆனால் கடந்த சில நாள்களாக கிலோ ரூ. 56 முதல் ரூ. 58 வரை விலை உயர்ந்துள்ளது.

இதுதொடர்பாக தென்னிந்திய தென்னை சாகுபடியாளர் சங்கத் தலைவர் கிருஷ்ணசாமி கவுண்டர் கூறியது:

கடந்த இரண்டு ஆண்டுகளாக பொள்ளாச்சி வட்டாரத்தில் கடும் வறட்சி நிலவியது. இதனால் தென்னை மரங்கள் வறண்டும், காய்க்கும் திறனை இழந்தும் உள்ளன. இதனால் தேங்காய் விலை அதிகபட்சமாக ரூ. 9 வரை உயர்ந்துள்ளது.

தேங்காய்க் கொப்பரைக்கு அரசின் குறைந்தபட்ச ஆதரவு விலை ரூ. 52.50. ஆனால் தேங்காய் உற்பத்தி குறைந்ததால் வெளி மார்க்கெட்டில் கொப்பரை விலை உயர்ந்துள்ளது என்றார்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 81.70 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை 81.70 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,432 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 1,450 கன அடி நீரும், வாய்க்காலில் 2,400 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 16.60 டி.எம்.சி.

## நேரடி நெல் விதைப்பு முறை:விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கக் கோரிக்கை

நேரடி நெல் விதைப்பு முறை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க வேண்டும் என்று கீழ்பவானி விவசாயிகள் நலச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து இச் சங்கத் தலைவர் செ.நல்லசாமி, சிவகிரியில் நிருபர்களிடம் கூறியது: நடப்பு பாசன பருவத்தில் பெரும்பாலான டெல்டா மாவட்ட விவசாயிகள் நேரடி நெல் விதைப்புக்கு மாறியுள்ளனர். விவசாய வேலைகளுக்கு ஆள்கள் கிடைக்காததால், நாற்றங்காலிலிருந்து நாற்றைப் பறித்து நடவு செய்யும் முறையை மாற்றி நேரடி நெல் விதைப்பு முறைக்கு மாறியுள்ளனர். இதில் வேலைப் பளுவும் குறைவு. சாகுபடி செலவும் குறைவு.

கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சி, பயிர் பாதியில் காய்ந்து போனது போன்ற காரணங்களால் விவசாயிகள் பெரும் நஷ்டத்தை சந்தித்துள்ளனர். இதனால் நடப்பாண்டு சாகுபடிக்கான பராமரிப்பு செலவின்றி விவசாயிகள் இருப்பதும், இந்நிலைக்கு மாற முக்கிய காரணங்களாகும். டெல்டா மாவட்டங்களுக்கு பாசனத்துக்காக மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறக்கப்பட்டும், அப்பகுதிகளில் நூறு நாள் வேலை உறுதி திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருப்பதும் விவசாயப் பணிகளுக்கு ஆள்கள் கிடைக்காமல் போனதற்கு முக்கியக் காரணமாகும்.

இதேநிலை தான் கீழ்பவானி பாசனப் பகுதிகளிலும் உள்ளது. கடந்த ஆண்டு கீழ் பவானி பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால் நிலுவையில் இருந்த பயிர்களும் காய்ந்து போகின. தோப்பு தோப்பாக தென்னை மரங்களும் காய்ந்து விட்டன.

இதனால் நடப்பு ஆண்டில் நெல் சாகுபடி பரப்பளவு அதிகரித்து இருக்கும். கீழ் பவானி பாசன விவாயிகள் பலருக்கு நேரடி நெல் விதைப்பு குறித்து தெரியாது. இப்பாசன

பகுதியில் இதை அறிமுகப்படுத்துவதும், அதற்கான பயிற்சி அளிக்கப்படுவதும் காலத்தின் கட்டாயமாகும்.

மேலும் நேரடி நெல் விதைப்பால் விளைச்சல் குறையாது. எனவே வேளாண் துறையும், மாவட்ட நிர்வாகமும் தனிக்கவனம் செலுத்தி, நேரடி நெல் விதைப்புக்கு பயிற்சி அளிக்க முன்வர வேண்டும் என்றார்.

---

### மாட்டுச் சந்தைக்கு எருமைகள் வரத்து குறைந்தது

தெலங்கானா பிரச்னை காரணமாக கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தைக்கு எருமைகள் வரத்து குறைந்திருந்தது.

ஈரோடு கருங்கல்பாளையம் மாட்டுச் சந்தை வாரந்தோறும் வியாழக்கிழமை நடைபெற்று வருகிறது. இங்கு, தமிழகம் முழுவதும் இருந்து விவசாயிகள் தங்களது பசுக்கள், எருமைகளை விற்பனைக்காக கொண்டு வருகின்றனர். கர்நாடகம், ஆந்திரம், கேரளம் மற்றும் தமிழக வியாபாரிகள் இவற்றை வாங்குவதற்காக ஈரோடு சந்தைக்கு வருவது வழக்கம்.

இந்த வாரம் பசுக்கள் அதிக எண்ணிக்கையில் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. ஆனால், எருமைகள் எண்ணிக்கை வழக்கத்தை விடக் குறைவாக இருந்தது.

ஆந்திர மாநிலத்தில் தெலங்கானா போராட்டம் தொடர்வதால் ஒரு மாதத்துக்கும் மேலாக ஆந்திர வியாபாரிகள் ஈரோடு சந்தைக்கு குறைவாக வருகின்றனர். இதனால், எதிர்பார்த்த விலை கிடைப்பதில்லை என்பதால் எருமைகளை விற்பனைக்கு கொண்டு வருவதை விவசாயிகள் குறைத்துக் கொண்டனர்.

இந்த வாரம் 400 பசுக்களும், 300 எருமைகளும் கொண்டு வரப்பட்டன. பசுக்கள் ரூ.14,000 முதல் ரூ.35,000 வரையும், எருமைகள் ரூ.15,000 முதல் ரூ.34,000 வரையும் விலை போனதாக சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன.

---

### நெல் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வலியுறுத்தல்

மழையால் பாதிக்கப்பட்ட நெல் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் கடலூர் மாவட்டச் செயலர் ரவிச்சந்திரன் தலைமையில் விவசாயிகள் மாவட்ட ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமாரிடம் அண்மையில் அளித்த மனு விவரம்:

கடலூர், நெல்லிக்குப்பம், அண்ணாகிராமம், குறிஞ்சிப்பாடி, குள்ளஞ்சாவடி மற்றும் கம்மாபுரம் ஆகிய பகுதிகளில் குறுவைப் பருவத்துக்கு விவசாயிகள் 15 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெற்பயிர் சாகுபடி செய்து அறுவடைக்குத் தயாராக இருந்தன.

இந்நிலையில் 15 நாள்களாக பெய்த மழையின் காரணமாக நெற்கதிர்கள் தண்ணீரில் மூழ்கி முளைக்கத் தொடங்கின. ஏக்கருக்கு 40 மூட்டை மகசூல் எதிர்பார்த்த நிலையில் 5 முதல் 10 மூட்டை அளவுக்கூட கிடைக்கவில்லை. இதனால் கடலூர் மாவட்டத்தில் ரூ.2 கோடி அளவில் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே பாதிக்கப்பட்ட நெல் விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதோடு, முளைத்த நெல்லை தனியார் விலைக்கு வாங்க மறுப்பதால் அவற்றை அரசே கொள்முதல் செய்ய வேண்டும். விருத்தாசலம் - திட்டக்குடி மெயின் ரோட்டில் குடிக்காடு அரிசி ஆலையில் இருந்து 2 கிலோ மீட்டர் தூரம் வரை உள்ள டி.செங்கமேடு சாலை குண்டும், குழியுமாக மிகவும் மோசமான நிலையில் காணப்படுகிறது. விவசாயிகளின் உற்பத்திப் பொருள்கள், இடுபொருள்கள் எடுத்துச் செல்வதற்கும், சர்க்கரை ஆலைக்கு கரும்பு எடுத்துச் செல்ல மிகவும் சிரமமாக இருக்கிறது.

எனவே இச்சாலையை சிறப்புத் திட்டத்தில் மாவட்ட நெடுஞ்சாலைத் துறையின் மூலம் சீரமைத்துத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

---

## மதுரை மாவட்டத்தில் சரிந்த வேளாண் உற்பத்தி உயருமா?

கடந்த ஆண்டு நிலவிய கடுமையான வறட்சியால் வேளாண் உற்பத்தி வெகுவாகக் குறைந்துவிட்ட நிலையில், இந்த ஆண்டு பருவ மழையை எதிர்நோக்கி மதுரை மாவட்ட விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

மதுரை மாவட்டத்தில் ஜனவரி முதல் டிசம்பர் சராசரியாக 874 மி.மீ. மழை பெய்யும். இதில் அதிகபட்சமாக அக்டோபர் முதல் டிசம்பர் வரையிலான வட கிழக்கு பருவக் காற்று காலத்தில்தான் மழை கிடைக்கும். இந்த மூன்று மாதங்களில் மட்டும் சராசரியாக 406.09 மி.மீ. மழை பதிவாகும்.

மிகக் குறைந்த மழையளவு:

கடந்த ஆண்டில் கோடை (மார்ச் முதல் மே) மற்றும் தென்மேற்குப் பருவக்காற்று (ஜூன் முதல் செப்டம்பர்) காலத்தில் ஓரளவுக்கு மழை கிடைத்தபோதும், வட கிழக்குப் பருவக் காற்று காலத்தில் சராசரிக்கும் மிகக் குறைவாகவே பெய்தது. ஒட்டுமொத்தமாக கடந்த ஆண்டில் 535.34 மி.மீ. மட்டுமே மழை கிடைத்தது. கடந்த 10 ஆண்டுகளில் மதுரை மாவட்டத்தில் இதுவே மிகக் குறைவான மழையளவு ஆகும்.

வேளாண் உற்பத்தி பாதிப்பு:

மாவட்டத்தின் பாசனத்துக்கு ஆதாரமான வைகை அணையில் மிகக் குறைந்த நீர் இருப்பு இருந்தது. இதன் காரணமாக பாசனத்துக்கு போதிய அளவு தண்ணீர் திறக்க முடியவில்லை.

இச் சூழலில் கடுமையான வறட்சி காரணமாக நெல், தானியங்கள், பயறு வகைகளின் உற்பத்தி குறைந்துபோனது. மதுரை மாவட்டத்தில் வழக்கமாக ஏறத்தாழ 3 லட்சம் மெட்ரிக் டன் வரை நெல் உற்பத்தி செய்யப்படும் நிலையில், கடந்த ஆண்டில் 56 ஆயிரத்து 349 மெட்ரிக் டன் மட்டுமே நெல் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. சிறு தானியங்கள் 31,088 மெட்ரிக் டன், பயறு வகைகள் 3,889 மெட்ரிக் டன் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டன.

மழை பெய்ய வாய்ப்பு:

நடப்பு ஆண்டில் இப்போதைய சூழலில் ஓரளவுக்கு மழை கிடைத்திருப்பதால் வேளாண் உற்பத்தியில் பாதிப்பு இருக்காது என வேளாண் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் ஜெய்சிங் ஞானதுரை கூறியது: ஜனவரி-பிப்ரவரி மாதங்களில் சராசரிக்கும் அதிகமாகவும், மார்ச் முதல் மே வரை சராசரியை அளவை ஒட்டியும் மழை பதிவாகியுள்ளது. ஜூன் முதல் செப்டம்பர் வரை பெய்யும் தென்மேற்குப் பருவக்காற்று காலத்தில் 288 மி.மீ. மழை கிடைக்கும். இதில் இதுவரை 146.65 மி.மீ. கிடைத்துள்ளது. வடகிழக்குப் பருவக்காற்று காலத்திலும் நல்ல மழை எதிர்பார்க்கப்படுகிறது.

இதையொட்டி, நடப்பு ஆண்டுக்கு 2.99 லட்சம் மெட்ரிக் டன் நெல், 67,200 மெட்ரிக் டன் தானியங்கள், 7,207 மெட்ரிக் டன் பயறு வகைகள் உற்பத்திக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றார்.

---

### விவசாய நிலங்களில் தண்ணீர் தேக்கத்தால் பயிர்கள் சேதம்

கொடைக்கானலில் பெய்து வரும் மழை காரணமாக, விவசாய நிலங்களில் தண்ணீர் தேங்கி பயிர்கள் சேதமடைந்து வருகின்றன.

கொடைக்கானலில் கடந்த ஒரு வாரமாக தொடர்ந்து மழை பெய்து வருகின்றது. குறிப்பாக, மேல்மலைக் கிராமங்களான பூம்பாறை, மன்னவனூர், கிளாவரை, பூண்டி, கூக்கால், குண்டுபட்டி, கவுஞ்சி ஆகிய பகுதிகளில் கடந்த 10 நாள்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

இதனால், அப் பகுதிகளில் நூற்றுக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள கேரட், உருளைக் கிழங்கு, பீன்ஸ், பூண்டு போன்றவை சேதமடைந்துள்ளன. எனவே, விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

இது குறித்து, கொடைக்கானல் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் கூறியது:

கொடைக்கானலில் பெய்து வரும் தொடர்மழை காரணமாக, விவசாய நிலங்களில் தண்ணீர் தேங்கி, பயிர்கள் அழுகியும், பூச்சி நோய் தாக்கியும் சேதமடைந்து வருகின்றன. மேலும், விளைந்த உருளைக் கிழங்கை எடுக்க முடியாமல் அவதிப்பட்டு வருகிறோம். உருளைக் கிழங்கை எடுத்து அவற்றின் தோல் சேதமாகாத வகையில் பக்குவமாக காய்கறச் சந்தைக்கு அனுப்ப வேண்டும்.

விளைந்த காய்கறிகளை உரிய காலத்துக்குள் எடுக்க முடியாமல் உள்ளதால், பாதிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால், மழை நின்றால்தான் மேற்கொண்டு விவசாயப் பணிகளை செய்ய முடியும் என்றனர்.

---

### விவசாயிகள் விழிப்புணர்வுக் கூட்டம்

காவேரிப்பாக்கம் பகுதியில் 5 கிராமங்களில் விவசாயிகளுக்கான விழிப்புணர்வு கூட்டங்கள் வெள்ளிக்கிழமை நடைபெற்றன.

தமிழ்நாடு நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் கொசஸ்தலையாறு உப படுகையில் வேலூர் மாவட்டத்தில் காவேரிப்பாக்கம் மற்றும் பனப்பாக்கம் பகுதிகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த 8 துறைகளின் சார்பில் ஒருங்கிணைந்த கூட்டங்கள் காவேரிப்பாக்கம் மற்றும் பனப்பாக்கம் பகுதிகளில் நடத்த திட்டமிட்டப்பட்டது.

அதன்படி காவேரிப்பாக்கம் அடுத்த உளியநல்லூர், சிறுவளையம், ரெட்டிவலம், கீழ்வீதி, வேட்டாங்குளம் கிராமங்களில் வெள்ளிக்கிழமை நடந்தது.

இக்கூட்டத்துக்கு வேளாண்மை உதவி இயக்குநர் எஸ்.விஸ்வநாதன் தலைமை தாங்கினார்.

கூட்டத்தில் நீர்வள நிலவளத் திட்டத்தின் செயல்பாடுகள் தற்போது உள்ள நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி விவசாயம் செய்தல், மாற்றுப் பயிர்கள் குறித்து ஆலோசனைகள், தரமான விதைகள், விவசாய இயந்திர பயன்பாடு, கால்நடை சுகாதாரம் குறித்து கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. கூட்டத்தில் பொதுப்பணித்துறை உதவிப்பொறியாளர் வி.எஸ்.தர்ம துரைசாமி, மற்றும் அதிகாரிகள் ஆர்.அன்பரசு, ராஜேந்திரன், மணிவண்ணன், வெங்கடேசன், திருஞானவேல், சந்திரசேகரன், செந்தில், நித்தியவேணி மற்றும் ஏரிப்பாசனசங்கத் தலைவர் விஜயன், ஊராட்சி மன்றத் தலைவர் கருணா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

## மழையால் ஏலத்துக்கு பருத்தி வரத்து குறைவு

பரவலாக ஆங்காங்கே பெய்து வரும் மழை காரணமாக, நாமக்கல்லில் வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு பருத்தி வரத்து மிகவும் குறைந்து காணப்பட்டது.

நாமக்கல்லில் திருச்செங்கோடு சாலையிலுள்ள கூட்டுறவு வேளாண் விற்பனை நிலையத்தில் வாரந்தோறும் வியாழக்கிழமை பருத்தி ஏலம் நடைபெறுகிறது. இந்த வாரம் (செப்.5) நடைபெற்ற ஏலத்துக்கு 500 மூட்டை பருத்திகளே வந்திருந்தன. அவற்றில் ஆர்சிஹெச் ரகம் குவிண்டால் ரூ.5550 முதல் ரூ.6350 வரையும், சுரபி ரகம் குவிண்டால் ரூ.5750 முதல் ரூ.6350 வரையும் என மொத்தம் ரூ.8 லட்சத்துக்கு விற்பனையாகியது.

கடந்த வாரம் (ஆக.29) நடைபெற்ற ஏலத்துக்கு வரப்பெற்ற ஆயிரம் மூட்டை பருத்திகளில் ஆர்சிஹெச் ரகம் குவிண்டால் ரூ.5600 முதல் ரூ.6300 வரையும், சுரபி ரகம் குவிண்டால் ரூ.5800 முதல் ரூ.6350 வரையும் என மொத்தம் ரூ.10 லட்சத்துக்கு விற்பனையாகியது. அதற்கு முந்தைய வாரம் (ஆக.22) நடைபெற்ற ஏலத்துக்கு 1500 மூட்டை பருத்திகள் வரப்பெற்று, ரூ.15 லட்சத்துக்கு விற்பனை செய்யப்பட்டிருந்தன.

அதன்படி, கடந்த இரு வாரங்களைவிட இந்த வாரம் பருத்தி மூட்டைகளின் வரவு மிகவும் குறைந்ததற்கு பரவலாக ஆங்காங்கே பெய்து வரும் மழையே காரணம் எனக் கூறப்படுகிறது. கடந்த வாரம் பெய்த மழையால் ஏலத்துக்கு வந்திருந்த பருத்தி மூட்டைகள் சற்று பாதிக்கப்பட்டன.

இதேபோல, இந்த வாரமும் மழை பெய்து பருத்தி மூட்டைகள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்க விவசாயிகள் ஏலத்துக்கு பருத்தி மூட்டைகளை கொண்டு வருவதைக் குறைத்திருக்கலாம் என வேளாண் விற்பனை நிலைய அலுவலர்கள் தெரிவித்தனர்.

## விதைக் கிராமத் திட்ட பயிற்சி முகாம்

திருச்செங்கோடு வட்டாரத்தில் விதைக் கிராமத் திட்டப் பயிற்சி முகாம்கள் நடைபெற உள்ளன.

இதுகுறித்து திருச்செங்கோடு வேளாண் உதவி இயக்குநர் நமச்சிவாயம் கூறியது:

திருச்செங்கோடு வட்டாரத்தில் 2013-2014ஆம் ஆண்டுக்கான விதை கிராமத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான முதல் கட்டப் பயிற்சி நடைபெற உள்ளது.

பயறு வகை விதை கிராமத் திட்டப் பயிற்சி வருகிற 5ஆம் தேதி இறையமங்கலம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திலும், 6ஆம் தேதி வட்டூர் கிராமத்திலும் நடைபெறுகின்றன.

எண்ணெய் வித்து பயிர்களுக்கான பயிற்சி முகாம் 16ஆம் தேதி விட்டம்பாளையம் தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்க வளாகத்திலும், 17ஆம் தேதி சிறுமொளசியிலும், 23ஆம் தேதி ஆனங்கூரிலும் நடைபெறுகின்றன.

இந்தப் பயிற்சியில் அந்தந்த பகுதி விவசாயிகள் கலந்து கொண்டு விதை தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ள வேண்டும் என்றார் அவர்.

---

### பண்ணைக் குட்டைகள் அமைக்க விவசாயிகளுக்கு 100 சத மானியம்

விவசாயிகள் தங்களுடைய நிலத்தில் முற்றிலும் இலவசமாக 100 சதவீத மானியத்தில் பண்ணைக் குட்டைகள் அமைக்க அணுகலாம் என, காடையாம்பட்டி வட்டார வேளாண் அலுவலக உதவி இயக்குநர் நாசர் தெரிவித்தார்.

இதுகுறித்து வெள்ளிக்கிழமை அவர் வெளியிட்ட அறிக்கை:

நீர் ஆதாரம் குறைந்து வரும் இந்த நேரத்தில் நீர் ஆதாரத்தைப் பெருக்கவும் நிலத்தடி நீர் மட்டத்தை மேலும் குறையாமல் பாதுகாக்கவும் வேளாண்மைத் துறை சார்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு நீர் ஆதாரத்தைப் பெருக்கி அதன் மூலம் விவசாய உற்பத்தியை அதிகரித்து உழவர் பெருமக்களின் வருவாயைப் பெருக்கும் உயர்ந்த நோக்கில் தமிழகம் முழுவதும் பண்ணைக் குட்டைகள் 100 சதவீத மானியத்துடன் முற்றிலும் இலவசமாக அமைத்து தரப்படுகின்றது.

பண்ணைக் குட்டைகளை அமைப்பதின் மூலம் மழை நீரை வீணாக்காமல் நிலத்தில் சேமிக்கவும்,அந்த உபரி நீரைக் கொண்டு அதிக விவசாயம் செய்யவும் வழி வகுக்கின்றன. விவசாயிகளின் வருமானத்தைப் பெருக்கும் வகையில் பண்ணைக் குட்டைகளில் மீன்கள் வளர்த்து லாபமடையவும் வாய்ப்புள்ளது. தங்களது நிலத்தில் பண்ணைக் குட்டைகள் அமைக்க விரும்பும் விவசாயிகள் காடையாம்பட்டி வட்டார வேளாண்மை அலுவலகத்தை அணுகலாம். இதற்கு நிலத்தின் கணிப்பொறி பட்டா ஒளி நகலை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்.

இந்த விண்ணப்பங்கள் வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகம் வாயிலாக மாவட்ட ஆட்சியரிடம் ஒப்புதல் பெறப்படும். இதையடுத்து, வட்டார வளர்ச்சி அலுவலர் மூலம் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் பண்ணைக் குட்டை அமைக்கும் பணி முற்றிலும் இலவசமாக மேற்கொள்ளப்படும் என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### சம்பாவுக்கு போதியளவு உரங்கள் இருப்பில் உள்ளன

சம்பா மற்றும் தாளடிக்கு போதியளவு உரங்கள் இருப்பில் வைக்கப்பட்டுள்ளதாக மாநில வேளாண்மைத் துறை அமைச்சர் எஸ். தாமோதரன் தெரிவித்தார்.

திருச்சி, கரூர், அரியலூர் மாவட்டங்களின் சம்பா- தாளடி சாகுபடி முன்னேற்பாடுகள் குறித்து திருச்சியில் விவசாயிகளுடன் வியாழக்கிழமை நடைபெற்ற கலந்தாய்வுக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியது:

நிகழாண்டில், காவிரியாற்றில் உரிய நேரத்தில் குறுவைக்கு பாசன நீர் கிடைக்காததால் மாநிலத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவும் வகையில் குறுவை சாகுபடி சிறப்புத் திட்டத்தை அறிவித்து ரூ. 18 கோடி நிதியையும் முதல்வர் ஜெயலலிதா ஒதுக்கீடு செய்துள்ளார்.

இதன்படி, திருச்சி மாவட்டத்திற்கு ரூ. 74.6 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, குறுவை சாகுபடி செய்யப்பட்டுள்ள 8,577 ஏக்கருக்குரிய 3,872 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு இதில் 5,000 ஏக்கருக்குரிய விவசாயிகளுக்கு உயிர் உரங்கள், நுண்சத்து மற்றும் தாவரப் பூச்சிக் கொல்லி மருந்துகள், 1,500 ஏக்கருக்கு ஜிப்சம் மற்றும் பாசன நீர் விரயமாவதைத் தடுக்க ஒரு பயனாளிக்கு அதிகபட்சமாக 180 மீட்டர் நீளத்துக்கு 325 யூனிட் பைப்புகள் விலையேதுமின்றி வழங்கப்பட்டுள்ளன.

திருச்சி மாவட்டத்தில் சம்பா பயிர் சாகுபடி டெல்டா பகுதிகளில் 92,200 ஏக்கரிலும், இதர பகுதிகளில் 57,800 ஏக்கரிலும் செய்யப்படவுள்ளது.

இதில் 90, 000 ஏக்கரில் திருந்திய நெல் சாகுபடி முறை பின்பற்றப்படவுள்ளது.

கடந்த ஆக. 2-ஆம் தேதி மேட்டூரிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால் விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி விதைகள், உரங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன்கள் வழங்கிட அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

சம்பா பருவத்துக்கு தேவையான உரங்களான யூரியா 7,417 மெட்ரிக் டன், டிஏபி 5,875 மெட்ரிக் டன், பொட்டாஷ் 3,334 மெட்ரிக் டன் மற்றும் கலப்பு உரம் 6,242 மெட்ரிக் டன் தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களிலும் மற்றும்

தனியார் உரக்கடைகளிலும் போதிய அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது என்றார் தாமோதரன்.

கூட்டத்தில், கதர் மற்றும் கிராமத் தொழில்கள் துறை அமைச்சர் டி.பி. பூனாட்சி, அரசுத் தலைமைக் கொறடா ஆர். மனோகரன், அரசு முதன்மைச் செயலர் மற்றும் வேளாண் உற்பத்தி ஆணையர் சந்தீப் சக்சேனா, வேளாண்மைத் துறை இயக்குநர் மு. ராஜேந்திரன், மாவட்ட ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன், எம்எல்ஏக்கள் மு. பரஞ்ஜோதி, என்.ஆர். சிவபதி, ஆர். சந்திரசேகர், மாவட்ட ஊராட்சித் தலைவர் தி. ராஜாத்தி ஆகியோர் பங்கேற்றனர்.

விவசாய சங்கங்களின் சார்பில் காந்திபித்தன், பொ. அய்யாக்கண்ணு, சி.மாசிலாமணி, புலியூர் நாகராஜன், அயிலை சிவசூரியன் உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

## நேரடி விதைப்பில் அதிக மகசூல் பெற வேளாண்துறை யோசனை

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வேளாண் கோட்டத்தில் நேரடி விதைப்பு செய்துள்ள விவசாயிகள் தொழில்நுட்ப முறைகளைக் கடைப்பிடித்து அதிக மகசூல் பெறுவதற்கான வழிமுறைகளை திருத்துறைப்பூண்டி வேளாண்மை உதவி இயக்குநர் டி. நடேசன் தெரிவித்துள்ளார்.

திருத்துறைப்பூண்டி வேளாண் கோட்டப் பகுதியில் இதுவரை 33,592 ஏக்கர் நிலப்பரப்பில் சம்பா நேரடி விதைப்பு செய்யப்பட்டுள்ளது. விதைப்பு செய்து முளைத்த பயிர்களுக்கு 20 நாட்களுக்கு மேல் சீரான அளவு தண்ணீர் கட்ட வேண்டும்.

மேலும், நீர் கட்டுவதால் பயிரின் வேர் வளர்ச்சி தூண்டப்பட்டு, நிலத்தில் இருந்து சத்துக்களை எடுக்கும் திறன் அதிகரிக்கிறது.

இதனால் அதிக தூர்கட்டி, பூச்சி நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட வாளிப்பான நெற்பயிர்கள் உருவாகும். தண்ணீர் கட்டியவுடன் களை எடுக்க வேண்டும். ஒரு சைக்கிள் டயர் அளவு பரப்பில் 35 பயிர்களுக்கு மேல் இருந்தால், கலைத்து பயிர்கள் அதிகம் இல்லாத இடத்தில் நடவு செய்ய வேண்டும்.

கைகளால் களை எடுப்பதால் மண் இளகி காற்றோட்டம் அதிகரித்து அதிக அளவு தூர்கட்டும்.

ஏக்கருக்கு 6 பொட்டலம் அசோஸ்பைரில்லம், 6 பொட்டலம் பாஸ்போ பாக்டீரியம் இரண்டையும் 50 கிலோ மக்கிய எருவுடன் கலந்து தெளித்த பின்னர் மீண்டும் களை எடுப்பதன் மூலம் நுண்ணுயிர் உரங்கள் நன்கு மண்ணில் கலக்கும் சூழ்நிலை ஏற்படும்.

விதை முளைத்த 30 நாட்களுக்கு பிறகு ஏக்ருக்கு 50 கிலோ டி.ஏ.பி. 18 கிலோ பொட்டாஷ் 5 கிலோ நெல் நுண்ணூட்டம் கலந்து சீராக நீர்கட்டி உரமிட வேணடும்.

முதல் உரம் தெளித்த 15 தினங்கள் கழித்து இலை வண்ண அட்டையைப் பயன்படுத்தி தழைச்சத்து தேவையை அறிந்து ஏக்கருக்கு 22 கிலோ யூரியாவுடன், 5 கிலோ வேப்பம் புண்ணாக்கு, 22 கிலோ ஜிப்சம் கலந்து தெளிக்க வேண்டும். தொடர்ந் து 15 தினங்களுக்கு ஒருமுறை ஏக்கருக்கு 22 கிலோ யூரியாவை கலப்பு கதிர் வரும் வரை இடவேண்டும். பயிர் தண்டு உருளும் நிலையில் ஏக்கருக்கு 22 கிலோ யூரியாவுடன், 18 கிலோ பொட்டாஷ் கலந்து அவசியம் இட வேண்டும். இதனால் நெற்பயிரில் பதர் குறைந்து வாளிப்பான நெல்மணிகள் உருவாகும்.

## விவசாயிகளுக்கு மானிய விலையில் களைக்கொல்லி

விவசாயிகளுக்குத் தேவையான அளவுக்கு மானிய விலையில் களைக் கொல்லி வழங்கப்படும் என்றார் தமிழக வேளாண் துறை அமைச்சர் செ. தாமோதரன்.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை, ஆட்சியர் சி. நடராசன் தலைமையில் நடைபெற்ற விவசாயிகளுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் அவர் மேலும் பேசியது: முதல்வர் ஜெயலலிதா டெல்டா மாவட்டங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து வேளாண் திட்டங்களை அறிவித்து வருகிறார்.

வேளாண்துறை சார்பில் விரைவில் நேரடி நெல்விதைப்பு மற்றும் நடவுக் குறித்து மாநிலம் முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்படும். தற்போது களைக்கொல்லி அதிகம் தேவையென தெரிய வந்துள்ளது. எனவே, கூடுதலாக மானிய விலையில் களைக்கொல்லிகள் வழங்கப்படும் என்றார் தாமோதரன்.

மன்னார்குடி எஸ். ரெங்கநாதன்: நேரடி நெல் விதைப்பு அதிகம் செய்யப்பட்டுள்ளது. நீர் மேலாண்மை அவசியமாகிறது. மாவட்டத்தில் அதிகளவில் விரிவாக்கப் பணியாளர் பணியிடங்களை ஏற்படுத்த வேண்டும்.

பி.எஸ். மாசிலாமணி: கரைக்காவலர்களை அதிகம் நியமிக்க வேண்டும். பாசன வாய்க்கால் களை தூர்வார வேண்டும். புதிய உறுப்பினர்களுக்கு நிபந்தனையின்றி கூட்டுறவு வங்கியில் பயிர்க் கடன் மற்றும் 75 சதவீத மானியத்தில் வேளாண் இடுபொருள்கள் வழங்க வேண்டும்.

ஜி. சுந்தரமூர்த்தி: போர்க்கால அடிப்படையில் உள்வாய்க்கால்களை தூர்வார வேண்டும். மானிய விலையில் வழங்கப்படும் விதை நெல் தட்டுப்பாட்டை போக்க வேண்டும்.

பி.ஆர். பாண்டியன்: தேவைக்கேற்றப் பகுதியில் தண்ணீர் பகிர்ந்தளித்து, பலவீனமாக பகுதிகளில் கரைகளை பலப்படுத்த வேண்டும். திருவாரூர் மாவட்டத்தில் மத்தியக் கூட்டுறவு வங்கி அமைக்க வேண்டும்.

சா.வீ. ராமகிருஷ்ணன்: மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து, கூட்டுறவு சங்கங்களுக்கு நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்தி தகுதியுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் கடன் வழங்க வேண்டும்.

கூட்டத்தில் உணவுத் துறை அமைச்சர் ஆர். காமராஜ், தமிழக அரசின் வேளாண்துறை முதன்மைச் செயலர் சந்தீப் சக்சேனா, வேளாண் இயக்குநர் மு. ராஜேந்திரன்,, மாவட்ட வேளாண் துணை இயக்குநர் க. மயில்வாகனன், இணை இயக்குநர் அ. கணேசன் உள்ளிட்டர் பங்கேற்றனர்.

சிறுதானிய உற்பத்திக்கு

ரூ. 114 கோடி ஒதுக்கீடு: முன்னதாக, திருவாரூர் மாவட்டம் மாங்குடி தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பயிர்க் கடன் வழங்கும் நிகழ்ச்சியில் 92 பயனாளிகளுக்கு ரூ. 15.40 லட்சம் மதிப்பில் வேளாண் இடுபொருள்கள் வழங்கி அமைச்சர் தாமோதரன் பேசியது:

அதிமுக அரசு பொறுப்பேற்றவுடன் தமிழகத்தில் 16,000 கிராமங்களில் உழவர் பெரு விழா நடத்தி, வேளாண் துறையின் திட்டங்களை விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஆண்டு தண்ணீர் பற்றாக்குறை காரணமாக ஏற்பட்ட வறட்சியை போக்கவும், திருவாரூர் மாவட்ட விவசாயிகளைப் பாதுகாக்கும் வகையிலும் ரூ. 140 கோடி வழங்கப்பட்டது.

மாநிலத்தில் சிறுதானிய உற்பத்திக்கு ரூ. 114 கோடி, வேளாண் துறையை இயந்திரமயமாக்கும் திட்டத்துக்கு ரூ. 124 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றார் அமைச்சர் தாமோதரன்.

நிகழ்ச்சியில் தமிழக உணவுத் துறை அமைச்சர் ஆர். காமராஜ் பேசியது:

சட்டப் போராட்டம் நடத்தி காவிரியில் தமிழகத்தின் உரிமையை பெற்று தந்துள்ளார் முதல்வர் ஜெயலலிதா. விவசாயிகளின் கோரிக்கைகள் அனைத்தும் முதல்வரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, தீர்வு காணப்படும் என்றார் காமராஜ்.

தொடர்ந்து, திருக்கரவாசலில் இயந்திரம் மூலம் நேரடி நெல்விதைப்பு செய்யப்பட்ட வயல், பழையங்குடியில் மனித உழைப்பு மூலம் நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்ட வயல்களை அமைச்சர்கள் ஆய்வு செய்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் சி. நடராசன், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஜெயலட்சுமி அம்பிகாபதி, தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையத் தலைவர் ஆர்.கே.பி. விசுவநாதன், துணைத் தலைவர் சி.பி.ஜி. அன்பு, கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் ஆசை மணி, திருவாரூர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை தலைவர் எஸ். கலியபெருமாள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கர்நாடகத்தில் பாக்கு உற்பத்தியாளர்களின் பிரச்னைக்கு தீர்வு காணப்படும் என்று, அந்த மாநில முதல்வர் சித்தராமையா உறுதி அளித்தார்.

பெங்களூரு கிருஷ்ணா அரசு இல்லத்தில் வெள்ளிக்கிழமை முன்னாள் முதல்வர் சதானந்த கெப்டா தலைமையில் பாக்கு உற்பத்தியாளர் சங்கத்தினர் முதல்வர் சித்தராமையாவைச் சந்தித்து பேசினர்.

அப்போது, பாக்கு மரங்கள் ஒருவித நோயால் பாதிக்கப்பட்டுள்ளதால், உற்பத்தி குறைந்து தாங்கள் பாதிப்படைந்துள்ளதாகக் கூறினர். மேலும், தங்கள் பிரச்னைக்கு தீர்வு காண வேண்டும் என்று அவர்கள் மனு அளித்தனர்.

இதுகுறித்து சதானந்த கெப்டா கூறியது:

கர்நாடகத்தில் உள்ள ஒன்பது மாவட்டங்களில் பாக்கு உற்பத்தியாளர்கள் கடும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இதை முதல்வர் சித்தராமையாவின் கவனத்திற்கு கொண்டு வந்தோம். மேலும், பாக்கு உற்பத்தியாளர்களின் நலனைப் பாதுகாக்க வேண்டும் என்று அவரிடம் கோரிக்கை விடுத்தோம்.

பாக்கு உற்பத்தியாளர்களின் குறைகளை அக்கறையுடன் கேட்டறிந்த முதல்வர், இந்த பிரச்னைக்கு தீர்வு காணப்படும் என்று உறுதி அளித்தார்.


மேலும், பாக்கு உற்பத்தியாளர்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண கோரக் சிங் அளித்த பரிந்துரைகளை உடனடியாக அமல்படுத்த வேண்டும் என்று முதல்வரை கேட்டுக் கொண்டோம்.

பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து முறையிட பாக்கு உற்பத்தியாளர்களை அழைத்து செல்ல வேண்டும். பாக்கு உற்பத்தியாளர்களின் நிவாரணத்திற்கு ரூ.1,200 கோடி நிவாரணம் வழங்க வேண்டும்.

ஹெக்டேருக்கு ரூ.50 ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் அடங்கிய மனுவையும் சித்தராமையாவிடம் அளித்தோம் என்றார் சதானந்த கெப்டா.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**நாமக்கல் மண்டலத்தில் உற்பத்தி சரிவு: 4 மாதங்களில் 28½ லட்சம் முட்டைகள் குறைந்தன**



நாமக்கல்,

நாமக்கல் மண்டலத்தில் முட்டை உற்பத்தி சரிவடைந்து கொண்டே வருகிறது. கடந்த 4 மாதங்களில் மட்டும் 28½ லட்சம் முட்டைகள் குறைந்து உள்ளன.

<u>3½ கோடி முட்டைகள்</u>

நாமக்கல் மண்டலத்தில் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பு விவசாயத்திற்கு மாற்றாக குடிசை தொழிலாக தொடங்கப்பட்டது கோழிப்பண்ணை தொழில். தற்போது இந்த மண்டலத்தில் 1,100–க்கும் மேற்பட்ட கோழிப்பண்ணைகள் உள்ளன. இங்கு 4 கோடிக்கும் மேற்பட்ட முட்டையின கோழிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இதன்மூலம் நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 3½ கோடி முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

கடந்த 2011–ம் ஆண்டு சராசரியாக நாள் ஒன்றுக்கு நாமக்கல் மண்டலத்தில் 2 கோடியே 85 லட்சம் முட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. அது கடந்த ஆண்டு (2012) 3 கோடியே 35 லட்சமாக உயர்ந்தது. இதே நிலை இந்த ஆண்டும் ஏப்ரல் மாதம்

வரை நீடித்தது. அதாவது, ஜனவரி மாதம் சராசரியாக நாள் ஒன்றுக்கு 3 கோடியே 52 லட்சம் முட்டைகளும், பிப்ரவரி மற்றும் மார்ச் மாதங்கள் தலா 3 கோடியே 51 லட்சம் முட்டைகளும், ஏப்ரல் மாதம் 3 கோடியே 54 லட்சம் முட்டைகளும் உற்பத்தி செய்யப்பட்டன.

<u>உற்பத்தி சரிந்தது</u>

ஆனால், மே மாதம் முதல் முட்டை உற்பத்தி சரிவடைய தொடங்கி உள்ளது. தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு வெளியிட்டுள்ள புள்ளி விவரத்தின் படி, நாமக்கல் மண்டலத்தில் மே மாதம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 3 கோடியே 48 லட்சம் முட்டைகளும், ஜூன் மாதம் 3 கோடியே 44 லட்சம் முட்டைகளும், ஜூலை மாதம் 3 கோடியே 33 லட்சம் முட்டைகளும், ஆகஸ்டு மாதம் 3 கோடியே 26 லட்சம் முட்டைகளும் உற்பத்தி செய்யப்பட்டு உள்ளன. மே, ஜூன், ஜூலை, ஆகஸ்டு ஆகிய 4 மாதங்களில் மட்டும் முட்டை உற்பத்தி 28 லட்சத்து 46 ஆயிரம் குறைந்து உள்ளது. முட்டை உற்பத்தி குறைந்து கொண்டே வருவதற்கு, தொழிலில் ஏற்பட்டு வரும் நஷ்டம் காரணமாக குஞ்சு விடுவதை பண்ணையாளர்கள் குறைத்து கொண்டது தான் காரணம் என கூறப்படுகிறது.

இதுகுறித்து கோழிப்பண்ணையாளர்கள் கூறியதாவது:–

தீவன மூலப்பொருட்களின் விலையேற்றம் காரணமாக முட்டையின் உற்பத்தி செலவு நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டே வருகிறது. அதே சமயம் முட்டை கொள்முதல் விலை மிக குறைவான அளவே உயர்ந்து உள்ளது. இதனால் கோழிப்பண்ணை தொழிலில் கிடைத்து வந்த லாபம் குறைந்து கொண்டே வருகிறது. சில சமயங்களில் ஒரு முட்டைக்கு 5 காசுகள் முதல் 25 காசுகள் வரை நஷ்டம் கூட ஏற்படுகிறது.

இதை தவிர்க்க கோழிப்பண்ணையாளர்கள் குஞ்சு விடுவதை குறைத்து வருகின்றனர். இதுவே, முட்டை உற்பத்தி குறைந்து கொண்டே செல்வதற்கு முக்கிய காரணம் ஆகும். தீவன மூலப்பொருட்களின் விலை உயர்வை கட்டுப்படுத்த மத்திய அரசு வடமாநிலங்களில் உள்ள அரசு குடோன்களில் மனித உபயோகத்திற்கு பயன்படாமல் உள்ள தானியங்களை, கோழிப்பண்ணையாளர்களுக்கு மானிய விலையில் வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

<u>முட்டை ஏற்றுமதி அதிகரிப்பு</u>

முட்டை உற்பத்தி குறைந்து கொண்டே சென்றாலும், ஏற்றுமதி சற்று அதிகரித்து உள்ளது பண்ணையாளர்களுக்கு உற்சாகத்தை ஏற்படுத்தி உள்ளது. கடந்த ஜூலை

மாதம் 1 கோடியே 41 லட்சம் முட்டைகள் நாமக்கல் மண்டலத்தில் இருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு இருந்தன.

அது கடந்த மாதம் (ஆகஸ்டு) ஏறத்தாழ 2 கோடியே 88 லட்சம் அதிகரித்து 4 கோடியே 29 லட்சமாக உயர்ந்து உள்ளது. இதற்கு உலக சுகாதார நிறுவனத்தில் அங்கம் வகிக்கும் ஓமன் நாடு குறிப்பிட்ட ஒரு நிறுவனத்திற்கு ஏற்றுமதிக்கு அனுமதி அளித்து இருப்பதும், ஆப்கானிஸ்தானுக்கு முட்டை ஏற்றுமதி அதிகரித்து இருப்பதுமே காரணம் என கூறப்படுகிறது.

---

## சம்பா சாகுபடிக்கு பயிர்க்கடன் விரைவில் வழங்க வேண்டும் அமைச்சரிடம் விவசாயிகள் கோரிக்கை



50 சதவீத மானியத்தில் உரம்

சாமிஅய்யா: தற்போது சாகுபடிக்கு தேவையான தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. கூட்டுறவு வங்கி மூலம் பயிர்க்கடன் எளிதாக கிடைக்க வழிவகை செய்தால் கடந்த ஆண்டு செய்ய முடியாத விவசாயத்தை இந்த ஆண்டு கூடுதலாக விவசாயிகள் செய்ய வசதியாக இருக்கும்.

தென்னங்குடி சண்முகவேல்: உழவு செய்ய டிராக்டருக்கு மணிக்கு ரூ.150 என்று நிர்ணயம் செய்யவதுடன், 50 சதவீத மானியத்தில் உரம் கொடுத்தால் தமிழகஅரசின் நெல் உற்பத்தி இலக்கை அடையும் வகையில் விவசாயிகள் சாகுபடி செய்வார்கள்.

மகாலிங்கம்(உழவர் மன்றம்): சம்பா சாகுபடி செய்யும் பணி நடைபெற்று வருகிறது. எனவே விவசாயிகளுக்கு தேவையான களைக்கொல்லி, உயிர்உரம், நுண்ணூட்டச்சத்து மானிய விலையில் வழங்க வேண்டும். வேளாண்மை பொறியியல் துறை சார்பில் வழங்கப்படும் பண்ணைக்கருவிகள் அதிக அளவில் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். வணிக வங்கிகள் மூலமும் விவசாயிகளுக்கு கடன் வழங்க வேண்டும். பசுந்தாள் உரங்களை முழு மானியத்தில் அரசு வழங்க வேண்டும்.

கள்ளப்பெரம்பூர் தங்கவேல்: கள்ளப்பெரம்பூர் ஏரியை தூர்வார கடந்த ஆட்சியில் ரூ.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. ஆனால் முழுமையாக தூர்வாரப்படவில்லை. இந்த ஏரியின் மூலம் தென்னங்குடி, சீராளூர், சக்கரசாமந்தம், ராயந்தூர் உள்பட 10 கிராமங்களில் 10 ஆயிரம் ஏக்கர் சாகுபடி செய்யப்படுகிறது. எனவே இந்த கள்ளப்பெரம்பூர் ஏரியை தூர்வாரி காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அனைத்து விவசாயிகளுக்கும் சலுகை

குருவாடிப்பட்டி ராஜாங்கம்: விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளை பொருட்களுக்கு கூடுதல் விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். உற்பத்தி விளை பொருட்களுக்கு கூடுதல் விலை கிடைத்தால் தான் விவசாயிகள் மகிழ்ச்சியாக இருக்க முடியும். இல்லையென்றால் சொத்துக்களை விற்க வேண்டிய நிலை தான் ஏற்படும். பெரிய, சிறிய விவசாயிகள் என்று பாகுபாடு பார்க்காமல் அனைத்து விவசாயிகளுக்கும் சலுகைகள் வழங்க வேண்டும்.

<u>மேற்கண்டவாறு விவசாயிகள் தங்கள் கருத்துக்களை தெரிவித்தனர்.</u>

## விழுப்புரம் மாவட்டத்துக்கு 2500 டன் யூரியா உர மூட்டைகள், சரக்கு ரெயிலில் வந்தது



விக்கிரவாண்டி அருகே முண்டியம்பாக்கம் ரெயில் நிலையத்திற்கு சரக்கு ரெயிலில் வந்த யூரியா உர மூட்டைகள் லாரிகளில் ஏற்றி கொண்டு செல்வதை படத்தில் காணலாம்.

விழுப்புரம் மாவட்டத் துக்கு 2500 டன் யூரியா உர மூட்டைகள் சரக்கு ரெயிலில் வந்தது.

<u>சரக்கு ரெயில் மூலம்</u>

விழுப்புரம் மாவட்டத்துக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் மற்றும் உரமூட்டை கள் சரக்கு ரெயில் மூலம் விழுப் புரம் அருகே உள்ள முண்டியம் பாக்கம் ரெயில் நிலையத்துக்கு கொண்டு வரப்படும். பின்னர் அங்கிருந்த லாரிகள் மூலம் மாவட்ட நுகர் பொருள் வாணிப கழக குடோன்களுக்கு கொண்டு சென்று பின்னர் மாவட்டத்தில் உள்ள ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இதே போல் விழுப்புரம் மாவட்டத்தில் உரக்கடை வியா பாரிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க ளுக்கு தேவைக்காக யூரியா உர மூட்டைகள் தேவைப் பட்டது.

2500 டன் யூரியா உர மூட்டைகள்

இந்த யூரியா உர மூட்டைகள் தூத்துக்குடியில் இருந்து 42 சரக்கு ரெயில் பெட்டிகளில் 2500 டன் மூட்டைகள் நேற்று முண்டியம்பாக்கம் ரெயில் நிலையத்துக்கு வந்தது.

பின்னர் ரெயில் பெட்டிகளில் இருந்த உர மூட்டைகள் லாரிகள் மூலம் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள வியாபாரிகள் மற்றும் தொடக்க வேளாண் கூட்டு றவு சங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்டது.

தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

## நீர்வள நிலவள திட்டத்தில் 25 மாதிரி கிராமங்கள் தேர்வு :8 துறைகள் சேர்ந்து பசுமை கிராமமாக மாற்ற முடிவு

கடலூர்:நீர் வள, நிலவள மேம்பாட்டு திட்டத்தின் கீழ் கெடிலம் உப வடிநில கோட்டத்தில் பசுமைத் திட்டத்தை செயல்படுத்த 25 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

நீர் நிலைகளை மேம்படுத்தும் பொருட்டு உலக வங்கி நிதியுதவியுடன் தமிழகத்தில் நீர்வள, நிலவள மேம்பாட்டு திட்டங்கள் செயல்படுத்தி வருகிறது. அதில், ஒவ்வொரு உப வடிநிலப் பகுதிகளில் உள்ள நீர் நீலைகளை சீரமைத்து, அப்பகுதி விவசாய பாசனத்திற்கு வழி ஏற்படுத்திக் கொடுத்ததுடன், நிலத்தடி நீரை சேமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.தற்போது, தமிழகத்தில் நடைபெற்று வரும் நீர்வளம் மற்றும் நிலவள மேம்பாட்டுத் திட்டத்தை வரும் 2014 செப்டம்பர் மாதம் வரை உலக வங்கி நீட்டித்துள்ளது.அதனையொட்டி ஒவ்வொரு வடிநில கோட்டத்திலும், மாதிரி கிராமங்களைத் தேர்வு செய்து, அப்பகுதியில் பொதுப்பணித் துறை, கால்நடைத் துறை, மீன்வளத் துறை, வேளாண் துறை, வேளாண் பொறியியல், வேளாண் பல்கலை, தோட்டக்கலை மற்றும் வேளாண் விளைபொருள் விற்பனை ஆகிய 8 துறைகளும் இணைந்து, மாதிரி கிராமத்தில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதுடன், அப்பகுதியில் உள்ள விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்வது.கால்நடைகளுக்கு சிகிச்சை அளிப்பது. இலவசமாக தீவனம் வழங்குவது. புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தி விவசாயம் செய்வது. அதற்கான நவீன கருவிகள் மானிய விலையில் வழங்குவது. விவசாயிகள் உற்பத்தி செய்யப்படும் விளைபொருட்களை சந்தைப்படுத்துவது. மீன் பண்ணை அமைத்து அப்பகுதியில் வேலை வாய்ப்பு ஏற்படுத்துவது உள்ளிட்ட பணிகள் மேற்கொண்டு அப்பகுதி மக்களை முழுமையாக விவசாயத்தில் ஈடுபடுத்தி கிராமத்தை பசுமை கிராமமாக மாற்ற வேண்டும்.

அதன்படி கடலூர் மாவட்டத்தில், கெடிலம் உபவடிநிலப் பகுதியில் நீர் நிலைகளை ஆழப்படுத்தியதுடன், கெடிலம் ஆற்றில் குறுக்கே திருவதிகை மற்றும் திருவந்திபுரத்தில் உள்ள தடுப்பணைகள் சீரமைக்கப்பட்டதுடன், ஆற்றின் கரைகளும்

பலப்படுத்தப்பட்டது.அதனைத் தொடர்ந்து தற்போது பசுமைக் கிராம திட்டத்தை செயல்படுத்தும் பொருட்டு கடலூர் மற்றும் அண்ணா கிராம ஒன்றியங்களில் மொத்தம் 25 கிராமங்கள் தேர்வு செயயப்பட்டுள்ளன.அதில், கடலூர் ஒன்றியத்தில் வரக்கால்பட்டு, குணமங்கலம், சி.என்.பாளையம், திருமாணிக்குழி, நடுவீரப்பட்டு, விலங்கல்பட்டு, வானமாதேவி, ராமாபுரம், குமளங்குளம், சாத்தன்குப்பம், வெள்ளக்கரை, வெள்ளப்பாக்கம், வான்பாக்கம் ஆகிய 13 கிராமங்களும், அண்ணாகிராமம் ஒன்றியத்தில் எழுமேடு, பாலூர், சுந்தரவாண்டி, சன்னியாசிப்பேட்டை, அகரம், சித்தரசூர், நத்தம், திருக்கண்டேஸ்வரம், மேல்குமாரமங்கலம், பி.என்.பாளைம், மேல்கவரப்பட்டு, பல்லவராயநத்தம் ஆகிய 12 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.தேர்வு செய்யப்பட்டுள்ள இந்த கிராமங்களில் செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் குறித்தும், திட்டங்களை வரும் 2014ம் ஆண்டு செப்டம்பர் மாதத்திற்குள் முடிப்பது தொடர்பாக கலெக்டர் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடந்தது.அதனைத் தொடர்ந்து தேர்வு செய்யப்பட்டுள்ள 25 கிராமங்களிலும், திட்டத்தை விரைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

---

### விவசாயிகளுக்கு அரசு இழப்பீடுத் தொகை வழங்கப்படுமா? "ஆந்த்ராக்ஸ்' பரவாமல் தடுப்பது அவசியம்

விழுப்புரம்:ஆந்த்ராக்ஸ் நோய் தாக்குதலில் கால்நடைகளை இழக்கும் விவசாயிகளுக்கு அரசு இழப்பீடு வழங்கினால் நோய் பரவுவதை தடுக்க முடியும். பாதித்த விவசாயிகளுக்கு அரசு இழப்பீடு பெற்றுத் தர மக்கள் பிரதிநிதிகள் முயற்சி மேற்கொள்ள வேண்டும்.திண்டிவனம் அடுத்த நொளம்பூர் கிராமத்தில் கடந்த மாதம் 29ம் தேதி ஆந்த்ராக்ஸ் நோய் தாக்கியதில் ஒரு மாடு இறந்தது. அடுத்தடுத்து, கறவை பசுக்கள், கன்றுக் குட்டிகள் உள்ளிட்ட 10 மாடுகள் நோய் தாக்கி இறந்தன. இறந்த மாடுகளின் உரிமையாளர்களுக்கு இழப்பீடு தொகை வழங்க வழி இல்லை என வருவாய்த் துறையினர் தெரிவித்துள்ளனர். நோய் பரவும் முறைகால்நடைகளை ஆந்த்ராக்ஸ் நோய் தாக்குவதால் மாடு, ஆடுகள் இறந்து விடுகின்றன. நோய் தாக்குதல் குறித்து அறிகுறி தென்படாததால் கால்நடைகள் இறப்பதை தடுக்க முடிவதில்லை. ஆந்த்ராக்ஸ் நோய் பாதித்து இறந்த கால்நடைகளை இறைச்சிக்காக வெட்டும் போது வெளியாகும் வைரஸ் கிருமிகள் மூலம் நோய் பரவுகிறது. ஆந்த்ராக்ஸ் நோய் பாதித்த இறைச்சியை உண்ணும் பொது மக்களும் நோயால் பாதிக்கின்றனர்.இந்த நோய் பரவுவதை தடுக்க ஆந்த்ராக்ஸ் தாக்குதலில் இறந்த கால்நடைகளை இறைச்சிக்காக

வெட் டுவதை தவிர்க்க வேண்டும். அதன் உடல்களை ஊருக்கு ஒதுக்குப்புறமாக ஆழமான பள்ளம் தோண்டி புதைக்க வேண்டும்.வருவாய் ஒரு மாட்டின் தோல் ஆயிரம் ரூபாய் முதல் 1,500 ரூபாய் வரையும், மாட்டு இறைச்சி ஒரு கிலோ 100 ரூபாய் விற்கிறது.

சராசரியாக ஒரு மாடு 100 கிலோ முதல் 150 கிலோ வரை எடை இருப்பதால், நோய் தாக்கி இறந்த மாட்டினை வெட்டி விற்றால்10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் ரூபாய் வரை வருவாய் கிடைக்கிறது.இதே போல் ஆட்டின் தோல் 250 முதல் 500 ரூபாய் வரையும், ஆட்டு இறைச்சி ஒரு கிலோ 300 ரூபாய்க்கு மேல் விற்கிறது. சராசரியாக ஒரு ஆடு 10 கிலோ முதல் 20 கிலோ வரை எடை இருப்பதால், நோய் தாக்கி இறந்த ஆட்டினை வெட்டி விற்பதால் குறைந்தது 3 ஆயிரம் ரூபாய் வரை வருவாய் கிடைக்கிறது.இழப்பீடு தேவை ஆந்த்ராக்ஸ் நோய் தாக்கி இறந்த மாட்டினை புதைப்பதால் வருவாய் இழப்பு ஏற்படுவதாக உரிமையாளர் கருதுகின்றனர். இதனால் யாருக்கும் தெரியாமல் இறந்த மாட்டினை வெட்டி இறைச்சியாக விற்கின்றனர்.வழக்கமாக மழை வெள்ளம், மின்னல் தாக்கி கால்நடைகள் இறக்கும் போது, உரிமையாளர்களுக்கு இயற்கை இடர்பாடு நிவாரண நிதியாக இழப்பீடு வழங்கப்படுகிறது. ஆந்த்ராக்ஸ் நோய் தாக்குதலில் கால்நடைகள் இறந்தால் அரசு இழப்பீடு வழங்குவதில்லை.ஆந்த்ராக்ஸ் நோய் தாக்குதலில் இறக்கும் கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு குறைந்தது 5 ஆயிரம் முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை இழப்பீடு தொகை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் நோய் தாக்குதலில் இறந்த கால்நடைகளை இறைச்சிக்காக வெட்டி விற்பது தவிர்க்கப்படும்.இத்துடன், ஆந்த்ராக்ஸ் நோய் பரவாமல் தடுப்பதுடன், அந்த இறைச்சியை உண்ணும் பொது மக்களுக்கு நோய் பாதிப்பு ஏற்படுவதை தவிர்க்கலாம்.இப்பிரச்னையை அரசின் கவனத்திற்கு கொண்டு சென்று, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க மாவட்ட அமைச்சர் மோகன், தொகுதி எம். எல்.ஏ., அரிதாஸ் முயற்சி எடுக்க வேண்டும்.

---

### வாழை மரங்களை துவம்சம் செய்த காற்று : அவிநாசி அருகே விவசாயிகள் சோகம்

அவிநாசி:அவிநாசி வடக்கு பகுதியில் சூறாவளி காற்றுடன் பெய்த கனமழைக்கு, 35 ஆயிரம் வாழை மரங்கள் முறிந்து சேதமடைந்தன.அவிநாசி வடக்கு ஒன்றிய பகுதியிலுள்ள சேவூர், தண்டுக்காரன்பாளையம், முறியாண்டம்பாளையம்,

பாப்பாங்குளம், வடுகபாளையம் உள்ளிட்ட ஊராட்சிகளில், நூற்றுக்கணக்கான ஏக்கரில், நேந்திரன், பூவன் வாழை பயிரிடப்பட்டிருந்தன. இன்னும் சில வாரங்களில் அறுவடை செய்யப்பட இருந்தன. நேற்று முன்தினம் மாலை மேற்கண்ட பகுதிகளில், பலத்த சூறாவளி காற்றுடன் கனமழை பெய்தது. ஒன்றரை மணி நேரம் நல்ல மழை பொழிந்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்திருந்தனர். ஆனால், வாழை பயிரிட்ட விவசாயிகளை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. வடுகபாளையம் ஊராட்சியில் 10 ஆயிரம், பாப்பாங்குளத்தில் 16 ஆயிரம், தண்டுக்காரன்பாளையம், முறியாண்டம்பாளையம் மற்றும் சேவூர் ஊராட்சிகளில் 9,000 என மொத்தம் 35 ஆயிரம் வாழை மரங்கள் முறிந்து, பெருத்த நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளன. முறிந்த மரங்களில் உள்ள பிஞ்சு காய்களை, விவசாயிகள், தங்களின் கறவை மாடுகளுக்கும், ஆடுகளுக்கும் உணவாக அளிக்கின்றனர். பாதிக்கப்பட்ட விவசாயிகள் கூறுகையில், "இன்னும் சில வாரங்களில் அறுவடைக்கு தயாராக இருந்த வாழை மரங்கள் முறிந்தது அதிர்ச்சியை அளித்துள்ளது. வறட்சி நிலவும் சமயத்தில், கிடைத்த தண்ணீரை பயன்படுத்தி, கடன் வாங்கி, வாழை வைத்தோம்; பலத்த காற்றுக்கு அவை முறிந்து விட்டன. தமிழக அரசு நஷ்டயீடு வழங்க வேண்டும்,' என்றனர். வேளாண் துறை அதிகாரி ஒருவர் கூறுகையில், "ஊராட்சி வாரியாக, ஒவ்வொரு விவசாயியின் தோட்டத்துக்கும் சென்று கணக்கெடுத்துள்ளோம். சேதமான வாழை மரங்கள் பட்டியல், மாவட்ட அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்படும். நஷ்டயீடு வழங்குவது குறித்து அரசே முடிவு செய்ய வேண்டும்,' என்றார்.

---

### வெண்டை சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

மயிலம்:அங்கிணிகுப்பம் பகுதியில் வெண்டை செழித்து வளர்வதால் விவசாயிகள் மகிழ்ச்சிடையந்துள்ளனர்.மயிலம் ஒன்றியத்தில் அங்கிணிகுப்பம், சித்தணி, செண்டூர், மயிலம், தழுதாளி, கணபதிபட்டு, வீடூர், சிறுவை, ஆத்திகுப்பம், ஏழாய் கிராம பகுதிகளில் விவசாயிகள் வெண்டை சாகுபடி செய்ய துவங்கியுள்ளனர்.நிலத்தை நன்கு பதப்படுத்திய பின், வெண்டை விதைகளை நட வேண்டும். வெண்டை செடிகள் நட்ட 30 நாட்களிலிருந்து காய்கள் காய்க்க துவங்குகிறது.மயிலம் பகுதியில் மழை குறைவாக பெய்ததால் விவசாயிகள் காய்கறிகள் பயிரிட துவங்கியுள்ளனர்.சென்னை கோயம்பேடு, புதுச்சேரி வியாபாரிகள் சித்தணி பகுதிக்கு நேரடியாக வந்து கொள்முதல் செய்கின்றனர். இதனால் விவசாயிகள் விளைந்த காய்கறிகளை

சிரமமின்றி நல்ல விலைக்கு விற்கின்றனர். சில விவசாயிகள் விழுப்பரம் மார்க்கெட்டில் நேரடியாக விற்கின்றனர்.வெண்டைக்கு குறைந்த அளவு தண்ணீர், பராமரிப்பு செலவுகள் ஏற்படுவதால் மயிலம் பகுதி விவசாயிகள் வெண்டை பயிரிட ஆர்வம் காட்டு கின்றனர். மயிலம் அடுத்த அங்கிணிகுப்பம் கிராமத்தில் வெண்டை செழித்து வளர்ந்துள்ளது.

---

## மண் மாதிரி சேகரிப்பு முகாம்

வானூர்:வானூர் ஒன்றியம் ஆதனப்பட்டு, தைலாபுரம், கீழ்கூத்தப்பாக்கம் ஊராட்சியில் மண் மாதிரிகள் சேகரிப்பு முகாம் நடந் தது. வானூர் வேளாண் உதவி இயக்குனர் துரைசாமி, திண்டிவனம் எண்ணெய் வித்துக்கள் ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் பிரபு பேசினர்.வானூர் நிலவள வங்கி தலைவர் பக்தவச்சலம், ஆதனப்பட்டு ஊராட்சி தலைவர் தண்டபாணி, ஒன்றிய கவுன்சிலர் தர்மலிங்கம், தைலாபுரம் ஊராட்சி தலைவர் ஜெயா, கீழ்கூத்தப்பாக்கம் ஊராட்சி தலைவர் பூமாலை, வேளாண்மை அலுவலர் சுரேஷ், உதவி வேளாண்மை அலுவலர் சக்திவேல், ஆத்மா திட்ட தொழில்நுட்ப மேலாளர் நரசிம்மராஜ், பொருள் சிறப்பு அறிஞர்கள் வீரமணி, சந்திரசேகர் உள்ப பலர் கலந்துகொண்டனர்.திண்டிவனம் சுப்ரமணியம் வேளாண்மை பட்டய படிப்பு நிலைய மாணவர்கள் விவசாய நிலங்களில் மண் மாதிரிகள் சேகரித்தனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை வேளாண்மை அலுவலர் ஆரோக்கிய ராஜ், இளநிலை உதவியாளர் ராஜேந்திரன் செய்திருந்தனர்.

---

## தக்காளி விலை தொடர்ந்து சரிவு ஒரு கிலோ 8 ரூபாய்க்கு விற்பனை

சேலம்: சேலத்துக்கு தக்காளி வரத்து அதிகரித்துள்ளதால், ஒரு கிலோ, எட்டு ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த, 15 நாட்களாக தக்காளி விலையில், சரிவு ஏற்பட்டு வருகிறது. தக்காளி விளைச்சல், தற்போது அதிகமாகவே காணப்படுகிறது. ஒசூர், ராயக்கோட்டை, கிருஷ்ணகிரி பகுதிகளில் இருந்து உற்பத்தி செய்யப்படும் பெங்களூரு தக்காளி, தமிழகம் முழுவதும் அனுப்பப்படுகிறது. சேலம் நகரத்துக்கு மட்டும் தினமும், 250 டன் தக்காளி வரத்தாகிறது. தற்போது அறுவடை காலமாக இருப்பதால், தக்காளி வரத்து, மேலும் கூடியுள்ளது. சேலம் மார்க்கெட் பகுதியில், ஒரு கிலோ தக்காளி, எட்டு ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. இது குறித்து வியாபாரிகள் கூறியதாவது: மழை காலத்தில், ஒரு கிலோ தக்காளி, 40 ரூபாய், 50

ரூபாய் என விற்கப்படுவதுண்டு. கோடை காலத்தில், தக்காளி பழங்களின் அறுவடை அதிகளவு இருக்கும். அப்போதுதான், தக்காளி விலை அடியோடு குறைந்துவிடும். கடந்தாண்டை விட, இந்தாண்டு அதிகளவு தக்காளி பழங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. ஒசூர், ராயக்கோட்டை, கிருஷ்ணகிரி பகுதிகளில் விளையும் பெங்களூரு தக்காளி பழங்கள் சேலம் மட்டுமின்றி அனைத்து பெரிய நகரங்களுக்கும் அனுப்பப்படுகிறது. அதே போல் மற்றொரு ரகமான நாட்டு தக்காளி பழங்கள், உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி, பல்லடம், கிணத்துக்கடவு, நெகமம் ஆகிய இடங்களில் இருந்து வரத்தாகிறது. சேலம் மாவட்டத்தில், பனமரத்துபட்டி, மகுடஞ்சாவடி, ஆத்தூர் மற்றும் கள்ளக்குறிச்சி பகுதிகளில் இருந்தும், தக்காளி வரத்தாகிறது. ஆகஸ்ட் துவக்கத்தில், ஒரு கிலோ தக்காளி, 50 ரூபாய்க்கு விற்கப்பட்டது. படிப்படியாக விலை குறைந்து கடந்த வாரம், ஒரு கிலோ தக்காளி, 20 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது, மேலும் வரத்து அதிகரித்துள்ளதால், ஒரு கிலோ, எட்டு ரூபாய்க்கு விற்பனையாகிறது. லாபம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை; தக்காளியை விற்பனை செய்தால் போதும், என்ற நிலைக்கு வியாபாரிகள் வந்துள்ளனர். இதே நிலை நீடித்தால், தக்காளி விலை மேலும் குறைய வாய்ப்பிருக்கிறது.இவ்வாறு அவர்கள் கூறினர்.

---

### கே.ஆர்.பி., அணை நீர் மட்டம் உயர்வு

கிருஷ்ணகிரி: கர்நாடகா மாநிலம் மற்றும் தென் பெண்ணையாற்று படுகையில் பெய்து வரும் மழையை தொடர்ந்து, கிருஷ்ணகிரி கே.ஆர்.பி., அணைக்கு நீர் வரத்து அதிகரித்து இரண்டு நாளில், நீர் மட்டம் நான்கு அடி உயர்ந்துள்ளது. கர்நாடகா மாநிலம் பெங்களூரு சுற்றுவட்டார பகுதியில் கடந்த சில நாட்களாக கன மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக தென்பெண்ணை ஆற்றில் நீர் வரத்து அதிகரித்து ஓசூர் அடுத்த கெலவரப்பள்ளி அணை வேகமாக நிரம்பியது. அணையின் மொத்த கொள்ளவான, 44.4 அடியில், 44 அடி தண்ணீர் தேங்கியதும் அணைக்கு வரும் நீர் முழுவதும் அப்படியே தென்பெண்ணை ஆற்றில் திறந்துவிடப்படுகிறது. நேற்று காலை நிலவரபடி அணையில் இருந்து, 1,095 கன அடிநீர் தென்பெண்ணை ஆற்றில் திறந்துவிடப்பட்டது. கெலவரப்பள்ளி அணையில் இருந்து கடந்த மூன்று நாட்களுக்கு முன்பே தண்ணீர் திறந்துவிடப்பட்டதால், அந்த நீர் தற்போது கிருஷ்ணகிரி அடுத்த கே.ஆர்.பி., அணைக்கு வந்துள்ளது. கெலவரப்பள்ளி அணைக்கு கீழ் பகுதியில் உள்ள

தென்பெண்ணை ஆற்றின் நீர்பிடிப்பு பகுதியில் தொடர் மழை பெய்து வருவதால், கே.ஆர்.பி., அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. நேற்று காலை நிலவரப்படி கே.ஆர்.பி., அணைக்கு வினாடிக்கு, 1,240 கன அடிநீர் வந்தது.கடந்த இரண்டு நாட்களுக்கு முன் அணையில், 38 அடிநீர் இருந்தது. நீர் வரத்து அதிகரித்து தற்போது அணையின் நீர்மட்டம், 42 அடியாக உள்ளது. அணையின் மொத்த நீர்மட்டம் 52 அடியாகும். இரண்டு நாளில் அணையின் நீர்மட்டம் நான்கு அடி உயர்ந்துள்ளது. அணையில் இருந்து முதல் போக நெல் சாகுபடிக்கு இடது மற்றும் வலது புற கால்வாயில் சேர்த்து வினாடிக்கு, 150 கனஅடிநீர் திறந்துவிடப்பட்டுள்ளது. "வரும் நாட்களில் அணைக்கு நீர் வரத்து அதிகரிக்கும் என்பதால் அணை விரைவில் நிரம்ப வாய்ப்புள்ளது' என, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் குமார் கூறினார்.

---

### அறுவடைக்கு தயாரான நெற்கதிர்கள் சாய்ந்து கிடப்பதால் விவசாயிகள் கவலை

கோபிசெட்டிபாளையம்: கோபி சுற்று வட்டாரத்தில், கிணற்று பாசனத்தில் சாகுபடி செய்யப்பட்ட நெல் வயல்கள் அறுவடைக்கு, தயாரான நிலையில், கீழே சாய்ந்து விட்டதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். ஈரோடு மாவட்டத்தில், கடந் த இரண்டு ஆண்டுகளாக, பருவமழை கை கொடுக்கவில்லை. பருவமழை தவறியதால், பவானிசாகர் அணையின் நீர்மட்டம் குறைந்தது. ஈரோடு மாவட்டத்தில், பவானிசாகர் அணை மூல ம் தடப்பள்ளி, அரக்கன்கோட் டை, எல்.பி.பி., காலிங்கராயன் ஆகிய பாசனங்கள் பயன்பெறுகின்றன. பாசனப்பகுதியில் கரு ம்பு, மஞ்சள், வாழை, நெல் போன்றை முக்கிய பயிராக உள்ளன. பருவமழை தவறியதால் பவானிசாகர் அணையில் இரு ந்து பாசனங்களுக்கு தாமதமாக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளன. விவசாயத்தை நம்பியுள்ள விவசாயிகள், கிணற்று பாசனத்தின் மூலம் சென்ற, மூன்று மாதங்களுக்கு முன் நெல் நடவு செய்தனர். கள்ளிபட்டி, துறையம்பாளையம், அத்தாணி உள்ளிட்ட இடங்களில் அறுவடைக்கு தயாராகி உள்ளன. சில இடங்களில் நெல் அறுவடை பணி நடக்கிறது. சமீபத்தில், கோபி சுற்று வட்டாரத்தில் பலத்த மழை பெய்ததால், அறுவடைக்கு தயாராக இருந்த நெற்கதிர்கள் கீழே சாய்ந்து விட்டது. காற்று, மழையால், வயல்களில் நெல் மணிகள் சிதறி விட்டதால், விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. பல்வேறு சிரமங்களுக்கு இடையே நெல் நடவு செய்து, அறுவடைக்கு தயாரான நிலையில், நெல் இழப்பு ஏற்பட்டதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கிணற்று பாசனத்தில் நெல் நடவு செய்த விவசாயிகள்

கூறியதாவது: கூலி ஆட்கள் பற்றாக்குறை, உரங்கள் விலை உயர்வு போன்றவற்றால் நாளுக்கு நாள், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். பருவமழை பொய்த்ததால், நெல் பயிரிடும் விவசாயிகள், நெல் பயிரிட முடியாமல் பாதிக்கப்பட்டனர். பவானிசாகர் அணையில் இரு ந்த குறைந்தளவு நீரை பயன்படுத்தி தடப்பள்ளி, அரக்கன்கே ாட்டை பாசனங்களில், உயிர் நீர் திறக்கப்பட்டது. உயிர் நீர் மூலம் மற்றும் கிணற்று பாசனம் மூலம் நெல் நடவு செய்யப்பட்டன. அனைத்து இடங்களில் நெல் அறுவடைக்கு தயாராக உள்ளன. இந்நிலையில் சமீபத்தில் பெய்த மழையால் நெல் வயல்களில் நெல் மணிகள் கீழே சாய்ந்து விட்டன. நெல் அறுவடை செய்தாலும், நெல் மணி கீழே கொட்டி விடும். இயந்திரம் மூலம் அறுவடை செய்ய முடியாது. ஐந்து முதல், பத்து மூட்டை நெல் வரை வீணாகும் நிலை உள்ளது. ஒரு ஏக்கருக்கு, எட்டு முதல், பத்து பொதி கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம், என்றனர்.

---

### விவசாயகடன் உதவி

கிண்ணக்கொரைவிவசாயிகளுக்கு 6 லட்சம் ரூபாய் விவசாய கடன்வழங்கப்பட்டது. கிண்ணக்கொரை பகுதிவிவசாயிகள், விவசாய கடன் கேட்டு கிண்ணக்கொரை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் விண்ணப்பம் கொடுத்தனர். விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்ட பின் முதற்கட்டமாக 10க்கும் மேற்பட்ட உறுப்பினர்களுக்கு 6 லட்சம் ரூபாய் விவசாய கடன் வழங்கப்பட்டது. மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் ஆல்துரை சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு விவசாயிகளுக்கு 6 லட்சம் ரூபாய் கடன் வழங்கினார் கிண்ணக்கொரை வங்கி தலைவர் போஸ், துணைத்தலைவர் பிரகாஷ், வங்கி செயலாளர் செல்வன் மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் பலர் கலந்துகொண்டனர்.

---

### வேகமாக நிரம்பும் அமராவதி அணை பாசனத்துக்கு நீர் திறப்பில் மெத்தனம்

க.பரமத்தி: நீர் பிடிப்பு பகுதிகளில் கனமழையால், அமராவதி அணை வேகமாக நிரம்பி வரும் சூழ்நிலையில், பாசனத்துக்கு நீர் திறப்பதில் பொதுப்பணி துறையினர் மெத்தனம் காட்டுவதாக, விவசாயிகள் புகார் கூறுகின்றனர். திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை அருகில் அமைந்துள்ள அமராவதி அணை, 90அடி உயரமும், 4,047 மில்லியன் கன அடி மொத்த கொள்ளவும் கொண்டது. இந்த அணையின் மூலம் கோவை, ஈரோடு, திருப்பூர், கரூர் உள்ளிட்ட மாவட்டத்தை சேர்ந்த பல ஆயிரம் ஏக்கர்

விவசாய நிலங்கள் பயன் பெறுகின்றது. இதில், கரூர் மாவட்டத்தில் மட்டும், 17ஆயிரம் ஏக்கருக்கு நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. இதில், அரவக்குறிச்சி பகுதியில் சின்னதாரபுரம், புளியம்பட்டி, ராஜபுரம், கொத்தப்பாளையம், சின்னாக்கவுண்டனூர், பெருமாள்வலசு உட்பட, 30க்கும் மேற்பட்ட கிராமங்களில் அமராவதி பாசன விவசாயிகள், 8000 ஏக்கருக்கு மேல் வாழை, சூரியகாந்தி, பருத்தி, சோளம், கம்பு போன்ற பயிர்கள் பயிரிட்டுள்ளனர். ஆண்டும் தோறும் ஆகஸ்ட் கடைசி வாரத்தில், அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுவத்து வழக்கம். ஆனால் கடும் வறட்சி காரணமாக, கடந்த மாதம் கரூர் மாவட்டத்தில் குடிநீர் தட்டுப்பட்டை போக்க மக்கள் அமராவதி அணையிலிருந்து நீர் திறந்து விடப்பட்டது. பின் அணைக்கு வரும் நீர்வரத்து குறைந்ததால் நீர் வெளியேற்றமும் குறைக்கப்பட்டது. கடந்த ஒரு வாரமாக அணையின் நீர்பிடிப்பு பகுதியில் கன மழை பெய்து வருவதால், நீர் வரத்து தொடர்ந்து அதிகரித்து, நேற்று அணையின் நீர்மட்டம் 85.46 அடியாகும். நீர்வரத்து, 753 கன அடியாகவும், நீர் வெளியேற்றம் 400 கனஅடியாகவும், நீர் இருப்பு 3,641 மில்லியன் கன அடியாகவும் உள்ளது. இருப்பினும், பொதுப்பணித்துறை அதிகாரிகள், இன்னும் பாசனத்துக்கு அணையிருந்து திறந்து விடாமல் இருப்பதும் விவசாயிகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்துள்ளது. எனவே, விவசாயிகள் நலன் கருதி அமராவதி அணையிருந்து தண்ணீரை திறந்து விட உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என, தமிழக அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை வைக்கின்றனர்.

---

## இயற்கை வேளாண் விவசாயிகளுக்கு மானியம்: நமதுநெல்லை காப்போம் நிர்வாகி கோரிக்கை

திருத்துறைப்பூண்டி: திருவாரூர் மாவட்டத்தில் நேற்று ஆய்வு மேற்கொண்ட வோண்மைத்துறை அமைச்சர் தாமோதரனிடம் நமது நெல்லை காப்போம் மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன் கூறியதாவது: தமிழக முதல்வர் ஜெயலலிதா ஆட்சியில் உழவர்கள் நலன் கருதி பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தி வருகிறார். தமிழக காவிரி உரிமையை மீட்டெக்கும் சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொண்டு தமிழகத்துக்கு காவிரி உண்டு என்பதை உறுதி படுத்தி தமிழக உழவர்களின் வாழ்வாதாரத்தை நிலை நிறுத்திய ஒன்றாகும். கடந்த 2012ம் ஆண்டு உழவு மானியம், இடுபொருள் மானியம், பயிர் காப்பீட்டு பிரிமியம் தொகை, தண்ணீர் குழாய், டீசல் மானியம் என பல திட்டங்களை அறிவித்து விவசாயிகளுக்கு வழங்கியதோடு அரசு நிவாரணம் வழங்கியது. இது மிக பெரிய வறட்சியான சூழ்நிலையில் உழவர் மத்தியில்

மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. இதற்கு தமிழக முதல்வருக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறோம்.
முந்தைய ஆட்சியில் விவசாயிகளை சிறைக்கு தள்ளுவதுக்கு என்றே கொண்டு வரப்பட்ட தமிழ்நாடு வேளாண் மன்ற சட்டத்தை ரத்து செய்ததும், மரபணு மாற்று தொழில்நுட்படத்தை ஊக்கப்படுத்த மாட்டோம் என்பதும், சில்லரை வணிகத்தில் அன்னிய முதலீடு, உணவு பாதுகாப்பு சட்டம், இரண்டுக்கு எதிராகவும், தமிழக மக்கள் நலனுக்காகவும், குரல் கொடுத்தது பாராட்டத்தக்கது. நடப்பு 2013 - 2014ம் ஆண்டு சாகுபடிக்கு விதை நெல் 50 சதவீதம் மானியம் வழங்கிய வேளாண்மைத்துறைக்கும், மாவட்ட நிர்வாகத்துக்கும் நன்றி தெரிவித்து கொள்கிறேன். கடந்த 2012 - 2013ம் ஆண்டு கூட்டுறவு சங்க பயிர் கடன் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால், உழவர்கள் கடனாளியாக இருக்க வேண்டிய சூழலில் உள்ளது. இதை தவிர்க்க மொத்த கடன் தொகையில் 25 சதவீதம் உழவர்களிடம் பெற்று கொண்டு 75 சதவீத தள்ளுபடியை செய்து தர வேண்டும். கடந்த 2012 - 2013ம் ஆண்டு ஏற்பட்ட வறட்சி பாதிப்புக்கு இதுவரை இல்லாத அளவில் முதல்வர் வறட்சி நிவாரணம் பெரும் அளவில் வழங்கியுள்ளார். இந்நிலையில் பயிர் காப்பீட்டு இழப்பீடு தொகையில் அதிகபட்சம், ஏக்கருக்கு ரூபாய் 8,500 பிடித்தம் செய்து கொள்வதாக தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் தரப்பட்டுள்ள உறுதிமொழி பத்திரத்தை ரத்து செய்து முழுமையான இழப்பீடு தொகையை வழங்க வேண்டும்.
மாநிலம் முழுவதும், தற்போது உள்ள ஆட்சியில் இயற்கை வேளாண்மையில் உழவர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த வேளாண்மைக்கு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் சுற்றுசூழல் பாதுகாப்போடு, விவசாயம் செய்யும் விவசாயிகளை ஊக்கப்படுத்தி வரும் வேலையில் இந்த பணியில் இயற்கை வேளாண்மை செய்யும் உழவர்களுக்கு ஏக்கருக்கு ரூபாய் ஆறாயிரம் மானியம் வழங்க வேண்டும். இவ்வாறு ஜெயராமன் தனது கோரிக்கை மனுவில் தெரிவித்துள்ளார்.

---

## தேனியில் தனியார் ஆதிக்கம் விதை நெல் வினியோகத்தில் அதிகரிப்பு

தேனி:வீரிய ரக நெல் விதைகளை அதிகம் விற்பனை செய்வதில், தேனி மாவட்டத்தில் தனியார் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். விதை கொள்முதல் செய்யும் விவசாயிகள் கவனமாக இருக்குமாறு விவசாயத்துறை அறிவுறுத்தி உள்ளது. தேனி மாவட்டத்தில், தற்போது நெல் விதைப்பு பணிகள் நடந்து வருகின்றன. விவசாயத்துறை சார்பில், ஏ.டி.டி., 36, ஐ.ஆர்., 50 ரக நெல் விதைகள் வினியோகம் செய்யப்பட்டுள்ளன.

மாவட்டத்தில் உள்ள மொத்த விவசாயிகளில், 17 சதவீதம் பேருக்கு மட்டுமே, விவசாயத்துறை விதை சப்ளை செய்துள்ளது. மீதம் 83 சதவீத விவசாயிகள், வெளிமார்க்கெட்டில் தனியாரிடம் விதை வாங்கி உள்ளனர். பெரும்பாலான விவசாயிகள், வீரிய ஒட்டு ரக விதைகளையே பயன்படுத்துகின்றனர். இந்த ரக விதைகளில் இருந்து மீண்டும் விதைகளை பெற முடியாது. ஒரு முறை விதைத்து அதற்கான விளைச்சலை மட்டுமே பெற முடியும். இருப்பினும் விவசாயிகள் வெளிமார்க்கெட் விதைகளையே வாங்கி வருகின்றனர். இதனால் விதை நெல் விற்பனையில் தனியார் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. இவர்கள் விற்ற விதைகள் அனைத்தும் தரமானது, என்பதற்கான உறுதி எதையும் அளிக்க முடியாது. தரமற்ற விதைகள் என்றும் கூறி விட முடியாது. ஒவ்வொரு விவசாயியும் வெவ்வேறு கம்பெனிகளில் இருந்து விதை நெல் வாங்கி உள்ளனர். இதன் பலன் குறித்து, விளைச்சல் கிடைத்த பிறகே தெரியவரும். வழக்கமாக விதை நெல் மட்டும் விவசாயிகள் பயன்படுத்தி வருவார்கள். இம்முறை இதுவரை இல்லாத அளவில், வெளிமார்க்கெட்டில் வீரிய ரக விதைகளை பயன்படுத்தி உள்ளனர். இதனால் விளைச்சல் எப்படி இருக்குமோ, என விவசாயத்துறை குழப்பத்தில் உள்ளது.

---

## இலவச மின்சாரம் கொடுத்தும் நன்னீர் மீன் வளர்ப்பில் தயக்கம்

காரைக்குடி : பண்ணைக்குட்டைகளில் மீன் வளர்ப்பை மேற்கொள்வோர், விவசாயத்துக்கு வழங்கப்படும், இலவச மின்சாரத்தை இதற்கும் பயன்படுத்தி கொள்ளலாம்,என அரசு உத்தரவிட்டும், விவசாயிகள் தயக்கம் காட்டி வருகின்றனர். உள்நாட்டு மீன் வளர்ப்பில் தமிழக அரசு முக்கிய பங்கை வகிக்கிறது. கட்லா, ரோகு, மிர்கால், வெள்ளி கெண்டை, புல்கெண்டை, சாதா கெண்டை, கண்ணாடி கெண்டை, தோல் கெண்டை, சிலேப்பி கெண்டை, கெளிறு, தேளி, கெழுத்தி, விரால், பூவிரல் ஆகிய மீன்கள் நன்னீரில் வளர்க்கப்படுகின்றன. குளங்களை ஏலம் எடுத்து மீன் வளர்ப்பில் ஈடுபட்ட நிலை மாறி, தற்போது பண்ணை குட்டைகளில் மீன் வளர்ப்பை அரசு ஊக்கப்படுத்தி வருகிறது. ரூ.1.5 லட்சம் செலவில், மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் பண்ணை குட்டைகள், விவசாயிகளுக்கு இலவசமாக அமைக்கப்படுகிறது. சிவகங்கை மாவட்டத்தில், 3 ஆயிரம் பண்ணை குட்டைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. நிலத்தடி நீர் சேமிப்புக்கு முதலாவதாவும், அடுத்ததாக மீன் வளர்ப்பை விவசாயிகள் மேற்கொள்ள வழிவகை செய்யுமாறு வேளாண் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளது. விவசாயிகளுக்கு இதன் மூலம் ரூ.40 ஆயிரம் முதல் ரூ.ஒரு லட்சம் வரை வருமானமாக கிடைக்கும். மேலும், விவசாயத்துக்கு

மட்டுமே பயன்படுத்தி வந்த, இலவச மின்சாரத்தை விவசாயிகளின் வாழ்வாதரத்தை பெருக்கும் வகையில், மீன் வளர்க்கும், பண்ணைக்குட்டைக்கும் பயன்படுத்தலாம், என அரசு உத்தரவிட்டுள்ளது. ஏற்கனவே சிவகங்கை மாவட்டத்தில், 3500க்கும் மேற்பட்ட பண்ணை குட்டைகள் உள்ளன. தற்போது கூடுதலாக 3 ஆயிரம் பண்ணை குட்டைகள் அமைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால், பண்ணை குட்டை அமைத்தும் மீன் வளர்க்க விவசாயிகள் ஆர்வம் காட்டுவதில்லை. எனவே மீன் வளர்ப்பை மேற்கொள்ளும் விவசாயிகளை, வேளாண் அதிகாரிகள் தேடி வருகின்றனர். வேளாண் அதிகாரி ஒருவர் கூறும்போது: மீன் வளர்ப்பை பொறுத்தவரை, வேலை ஆட்கள் தேவை இல்லை. தவிடு, புண்ணாக்கை போட்டால் போதும். ஒரு மடங்கு செலவழித்தால், மூன்று மடங்கு லாபம். அரசு செலவில் இலவச பண்ணை குட்டை அமைத்து தருகிறோம். மீன் வளர்ப்பை விவசாயிகள் மேற்கொள்ள முன் வரவேண்டும். பண்ணை குட்டை அமைக்க விவசாயிகளை தேடி வருகிறோம், என்றார்.

---

### நெல்லை அணைகள் நிரம்புகின்றன

திருநெல்வேலி : திருநெல்வேலி மாவட்டத்தின் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் பாபநாசம், மணிமுத்தாறு, சேர்வலாறு, குண்டாறு, அடவிநயினார் அணை, கருப்பாநதி, கொடுமுடியாறு, ராமநதி, கடனாநதி உள்ளிட்ட அணைகள் உள்ளன. தற்போது பெய்துவரும் தென்மேற்குபருவ மழையினால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. சில ஆண்டுகளில் நிலவிய வறட்சிக்கு மாற்றாக இந்தமுறை அணைகள் நிரம்பிவருகின்றன. 143 அடி உயரம் கொண்ட பாபநாசம் அணையின் நீர்மட்டம் நேற்று 128 அடியை எட்டியது. ராமநதி,கடனாநதி, குண்டாறு, கருப்பாநதி உள்ளிட்ட அணைகள் ஏற்கனவே நிரம்பிவிட்டன. இந்நிலையில், செங்கோட்டை அருகே 96ல் கட்டத்துவங்கி 2002ல் முடிவுக்கு வந்த அடவிநயினார் அணைக்கட்டு இந்த முறை நிரம்பியுள்ளது. மொத்த கொள்ளளவான 132 அடியை எட்டியுள்ளது. இந்த அணையின் மூலம் பிசான சாகுபடி பருவத்தில் சுமார் 7 ஆயிரத்து 500 ஏக்கரும், கார் சாகுபடி காலத்தில் தற்போது மூவாயிரம் ஏக்கரும் பாசன வசதி பெறுகின்றன. ஒன்பது ஆண்டுகளுக்கு பிறகு அணை தற்போது நிரம்பியுள்ளதன் மூலம் பண்பொழி, அச்சன்புதூர், வாவாநகரம், இடைகால், ஆய்க்குடி உள்ளிட்ட கிராம மக்கள் பயன்பெறுகின்றனர்.

---

தினகரன்

### ரூ.28.87 லட்சத்தில் அதிவிரைவு துவரை சாகுபடி வேளாண்மை இணை இயக்குனர் ஆய்வு

வேலூர்: வேலூர் அடுத்த காட்பாடி வட்டாரத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின்கீழ் ரூ.27 லட்சத்தில் துவரை அதிவிரைவு பெருக்க தளைகள் பயிரிடப்பட்டுள்ளது. மேலும் ரூ.1 லட்சத்த 87 ஆயிரத்து 500 மதிப்பில் துவரை விளக்க தளைகள் பயிரிடப்பட்டுள்ளது. நவீன முறையில் பயிரிடப்பட்டுள்ள பெரியபுதூர், ஒட்டந்தாங்கல் மற்றும் சேவூர் ஆகிய கிராமங்களில் உள்ள விலை நிலங்களை, மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் ஜெயசுந்தர் நேற்று ஆய்வு செய்தார். அப்போது அடர்வு செடிகளை களைவது, இடைவெளி பராமரிப்பு, நுனி கில்லுதல், டிஏபி தெளித்தல் மற்றும் பூச்சி நோய் தடுப்பது குறித்த ஆலோசனைகளை விவசாயிகளுக்கு வழங்கினார். இதில் காட்பாடி உதவி இயக்குனர் விஜயகுமார், வேளாண்மை அலுவலர்கள் முருகன், வெங்கடேசன் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

### வாழை ஆராய்ச்சி பற்றி சொற்பொழிவு கூட்டம்

திருச்சி, : திருச்சி ஜோசப் கல்லூரியில் பாலம் நினைவு அறக்கட்டளையின் சார்பாக 44வது சொற்பொழிவு கூட்டம் நடைபெற்றது. ஜோசப் கல்லூரி தாவரவியல் துறை மற்றும் அன்ஸா மூலிகை உணவு நிறுவனத்துடன் இணைந்து வாழை ஆராய்ச்சிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை கையொப்பமிட்டு பரிமாற்றிக் கொண்டது. நிகழ்ச்சி கல்லூரியின் அதிபர் ஜான் பிரிட்டோ தலைமையில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் ஆண்ட்ரூ, தேசிய வாழை ஆராய்ச்சி மைய நிறுவனத்தின் இயக்குநர் முஸ்தபா, அன்ஸா மூலிகை உணவு நிறுவன இயக்குநர் பாலமுரளி ஆகியோர் இந்த ஒப்பந்தங்களை பரிமாற்றிக் கொண்டனர். தேசிய வாழை ஆராய்ச்சி மைய நிறுவனத்தின் இயக்குநர் முஸ்தபா “வாழை ஆராய்ச்சியில் தற்கால முன்னேற்றங்கள் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார். வாழை பயிரிடும் திருச்சி, தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கும் நாட்டின் மற்ற விவசாயிகளுக்கும் தேசிய

வாழை ஆராய்ச்சி நிறுவனம் வழங்கிவரும் தற்கால யுத்திகளையும், கண்டுபிடிப்புகளையும் பற்றி விரிவாக பேசினார்.

---

## வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் தீவனப்பயிர் சாகுபடி பயிற்சி6ம் தேதி நடக்கிறது

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட் டம் வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் தீவனப்பயிர் சாகுபடி மற்றும் ஊறுகாய் புல் தயாரிப்பு பயிற்சி முகாம் வரும் 6ம் தேதி நடக்கிறது. இதில் கலந்து கொள்ள விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயத்துடன் கால்நடை வளர்ப்பு இன்றியமையாத தொழிலாக உள்ளது. இன்றைய காலக்கட்டத்தில் விவசாய நிலங்களின் பரப்பளவு குறைந்து கொண்டு வருகிறது. அதனால் கால்நடைகளுக்கு தேவையான வைக்கோல் மற்றும் பசுந்தீவன புல் கிடைப்பது அரிதாக உள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் புல்வெளி பரப்பு 5,400 எக்டேர் அளவில் உள்ளது. ஆகையால் கால்நடைகளுக்கு பசுந்தீவனத்திற்கு தீவனப்புல் பயிர்களான கம்பு நேப்பியர் புல் (கோ 4), தீவன மறுதாம்பு சோளம் (கோ 29), கினிப்புல் (கோ 2), தீவன தட்டைப்பயிறு (கோ 5), முயல் மசால், வேலி மசால் போன்ற பயிறு வகை தீவன பயிர்களையும், கொழுக்கட்டை புல் (கோ 1), சுபா புல், அகத்தி போன்ற மரப்பயிர்கள் கால்நடைகளுக்கு புரதசத்து, மாவுசத்து மற்றும் தாது உப்புக்கள் சரிவிகிதத்தில் அளிப்பதால் பால் தரமாகவும், உற்பத்தி அதிகரித்து நல்ல வருமானமும் கிடைக்கும். இதை அடிப்படையாக கொண்டு வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் தீவன பயிர்களின் உற்பத்தி முறைகள் மற்றும் அவற்றை ஊறுகாய் புல்லாக தயாரிக்கும் முறைகளை ஒருநாள் பயிற்சி முகாம் வரும் 6ம் தேதி நடக்கிறது. இந்த பயிற்சி முகாமில் ஆர்வமுள்ள விவசாயிகள் பங்கேற்று பயனடையலாம். மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள முனைவர் அசோகன், பேராசிரியர் மற்றும் தலைவர், வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையம், புதுக்கோட்டை என்ற முகவரியிலோ, 9444719043 என்ற செல்போன் எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு புதுக்கோட்டை கலெக்டர் மனோகரன் தெரிவித்துள்ளார்.

---

## விதைநெல் வாங்கும்போது கடைபிடிக்க வேண்டிய வழிமுறை விவசாயிகளுக்கு யோசனை

புதுக்கோட்டை, : புதுக்கோட்டை மாவட்டத்தில் விதைநெல் வாங்கும் விவசாயிகள் மற்றும் விற்பனை செய்பவர்கள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறை குறித்து தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குனர் மனோகரன் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் தற்போது சம்பா பருவ சாகுபடிக்கு தயாராகி வருகின்றனர். இந்த நேரத்தில் விவசாயிகள் விதைகள் வாங்கும்போது தரமான சான்று பெற்ற விதைநெல்களை வாங்கி பயன்படுத்த வேண்டும். விதை நெல் மூட்டைகளில் சான்று அட்டை மற்றும் உற்பத்தியாளர் அட்டை முறையாக பொருத்தப்பட்டுள்ளதா என்று பார்க்க வேண்டும். மூட்டைகளில் ஈய முத்திரை பொருத்தி இருக்கிறதா என்பதை பார்த்து வேளாண்மை விரிவாக்க மையம், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் மற்றும் விதை விற்பனை உரிமம் பெற்ற தனியார் விதை விற்பனை நிலையங்களில் மட்டும் தான் வாங்க வேண்டும். தனியார் கடைகளில் விதைகள் வாங்கும்போது உரிய பணப்பட்டியல் கேட்டு வாங்க வேண்டும். அவ்வாறு வாங்கும்போது அந்த பணப்பட்டியலில் நெல், விதையின் பெயர், ரகம், அளவு, குவியல், எண், காலாவதி நாள் ஆகிய விவரங்கள் அடங்கியிருக்க வேண்டும். மேலும் தனியார் விதை விற்பனை நிறுவனங்களிடமும் விதைகள் போதுமான அளவு இருப்பு உள்ளது. அனைத்து விவசாயிகளும் தரமான சான்று பெற்ற விதைகளை உபயோகித்து அதிக மகசூல் பெறலாம். விதைகளின் தரத்தில் சந்தேகம் ஏற்பட்டாலோ அல்லது போலியான விதைகளாக இருக்கலாம் என தோன்றினாலோ விதை ஆய்வு துணை இயக்குனர், காட்டுத்தோட்டம், தஞ்சாவூர் 613 501 என்ற முகவரி அல்லது 04362267959 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். மேலும் பாண்டி, விதை ஆய்வாளர், புதுக்கோட்டை என்ற முகவரியிலோ, 9488620197 என்ற எண்ணிலோ, சக்திவேல், விதை ஆய்வாளர், அறந்தாங்கி, 9865557694 என்ற முகவரி மற்றும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு புகார் செய்யலாம். மேற்கண்ட வழிமுறைகளை பயன்படுத்தி தரமான விதைகளை தேர்வு செய்யுமாறு புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்ட விதை ஆய்வு துணை இயக்குனர் மனோகரன் தெரிவித்துள்ளார்.

### கந்தகசத்து அதிகம் உள்ள ஜிப்சம் உரம் இட்டால் நெற்பயிரில் அதிக மகசூல்

### விவசாயிகளுக்கு வேளாண் அதிகாரி யோசனை

நீடாமங்கலம்: நெற்பயிரில் அதிக விளைச்சல் பெறவும், திரட்சியான நெல் மணிகளை உருவாக்கவும் கந்தகசத்துள்ள ஜிப்சம் உரத் தை இட வேண்டும் என்று நீடாமங்கலம் வேளாண்மை உதவி இயக்குனர் இளஞ்செழியன் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: நெற் பயிருக்கு 16 வகையான ஊட்ட சத்துக்கள் தேவைப்படுகிறது. இவற்றுள் தழை, மணி, சாம்பல், துத்தநாக சத்துக்கள் மட்டுமின்றி கந்தகச் சத்தும் முக்கியமானது. தொடர்ந்து கந்தக சத்து இடாமல் நெல் பயிரிட்டு வந்தால் மண்ணில் உள்ள கந்தகச்சத்து உறிஞ்சப்பட்டு கந்தக சத்து குறைபாடு தோன்ற ஆரம்பிக்கும். கந்தக சத்து குறைபாடு தோன்றும்போது பயிரின் வளர்ச்சி குன்றி இருக்கும். முதலில் இளம் தளிர் இலைகள் மஞ்சளாகி பின் மற்ற இலைகளும் மஞ்சள் நிறமாக மாறிவிடும். பயிர்களில் துீர் கட்டுதல் குறைந்து விடும். தழைச்சத்து குறைபாடு ஏற்பட்டால் கீழ் இலைகள் மட்டும் மஞ்சளாக மாறும். ஆனால் சந்தகச்சத்து குறைபாட்டினால் இளம் இலைகளில் மஞ்சள் நிறம் தோன்றும். ஒரு டன் நெல் உற்பத்தி செய்ய 2.5 முதல் 3.5 கிலோ கந்தக சத்தை நெற்பயிர் எடுத்துக் கொள்கிறது. நெற்பயிரில் சிம்பு வெடிக்கும் பருவத்தில் அரை சதம் கந்தக சத்து இருக்க வேண் டும். இதற்கு குறைவாக இருந்தால் மற்ற ஊட்டச்சத்து உபயோகத்திறனும் குறைந்து விடும். ஒரு எக்டருக்கு 20 முதல் 30கிலோ கந்தகச்சத்து தேவைப்படுகிறது. கந்தக சத்தை தரக்கூடிய ரசாயன உரங்களான ஜிப்சம் அடி உரமாக இட்டும், மீதி பாதி அளவு கந்த சத்தை மேலுரமாக அம்மோனியம் சல்பேட் இட்டும் கூடுதல் விளைச்சல் பெறலாம். எனவே நெல் பயிர் வளர்ச்சிக்கு முக்கிய மான கந்தகச்சத்து உரத் தை கண்டிப்பாக இட்டு விளைச்சலை மேலும் அதிகரித்து கூடுதல் வருமானம் பெறுங்கள் என விவசாயிகளை, வேளாண் உதவி இயக்குனர் இளஞ்செழியன் கேட்டுக்கொண்டுள்ளார்.

---

### திருந்திய நெல் சாகுபடி செயல் விளக்கம்

நெல்லிக்குப்பம்: நெல்லிக்குப்பம் அடுத்த மேல்பட்டாம்பாக்கத்தில், கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்தின் சார்பில் தமிழ்நாடு நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் சேகர் என்பவரது விவசாய விளை நிலத்தில் திருந்திய நெல் சாகுபடி நாற்றங்கால் விதை விதைப்பு பற்றி குபேடா இயந்திரத்தின் மூலம் செயல் முறை விளக்க கூட்டம்

நடந்தது.

கடலூர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கி, செயல் விளக்க கூட்டத்தை துவக்கி வைத்து விளக்க உரை ஆற்றினார். பூச்சியியல் துறை பேராசிரியரும், நீர்வள நிலவள திட்டத்தின் பொறுப்பு விஞ்ஞானி துரைசாமி, உழவியியல் துறை பேராசிரியர் முரளிதரன், அண்ணாகிராம உதவி இயக்குனர் இளவரசன், பி.என் பாளையம் நீர் உபயோகிப்பாளர்கள் சங்க தலைவர் வேங்கடபதி, உழவர் மன்ற தலைவர் ஜெயவர்த்தனன், இ.ஐ.டி பாரி சர்க்கரை ஆலை பகுதி மேலாளர் கோவிந்த ராஜி, முன்னோடி விவசாயிகள் சேகர், கிருஷ்ணமூர்த்தி, ராஜேந்திரன், வெங்கடேசன், சுந்தர்ராஜி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

## தேங்காய் பருப்பு விலை உயர்வு தென்னை விவசாயிகள் மகிழ்ச்சி

பரமத்திவேலூர்: பரமத்தி வேலூர் தேங்காய் பருப்பு ஏல மார்க்கெட்டில் நேற்று நடந்த ஏலத்தில் கிலோவுக்கு விலை 75 காசுகள் உயர்ந்து காணப்பட்டது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகா ஜேடர்பாளையம், ஆனங்கூர், கு.அய்யம்ப £ளையம், பிலிக்கல்பாளையம், அண்ணா நகர், பாண்டமங்கலம், வேலாயுதம்பாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை பயிரிடப்பட்டுள்ளது.

இங்கு விளையும் தேங்காய்களை விவசாயிகள் பறித்து பருப்புகளை எடுத்து நன்கு உலர வைத்து வேலூரில் வாரந்தோறும் வியாழக்கிழமைகளில் உழவர் சந்தையில் செயல்பட்டு வரும் தேங்காய் பருப்பு ஏல மார்க்கெட்டிற்கு கொண்டு வருகின்றனர். இங்கு லாட் எண் கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் மூடிய உறை மூலம் ஏலம் விடப்படுகிறது. வியாபாரிகள் தங்களுக்கு கட்டுப்படியான விலையையும், லாட் எண்ணையும் எழுதி கவரில் போட்டு உரிய பெட்டியில் போட்டு வருகின்றனர். பின்னர் அதிகாரிகள் கவரை பிரித்து தேங்காய் பருப்பின் விலையை லாட் நெம்பரின் வரிசைப்படி ஏலத்தொகை தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி கடந்த வாரங்களில் தேங்காய் பருப்பு ஒரு கிலோ ரூ.51.25க்கு ஏலம் போனது.

இந்த வாரம் நேற்று நடைபெற்ற ஏலத்தில் ஒரு கிலோ தேங்காய் பருப்பு ரூ.52க்கு ஏலம் போனது. ஒரு தேங்காயின் விலை ரூ.6க்கு விற்பனை ஆகிறது. தேங்காய் பருப்பு விலை ஒரு கிலோவுக்கு 75 காசுகள் உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி

அடைந்துள்ளனர். நேற்று நடந்த ஏலத்தில் 25 விவசாயிகள் 580 கிலோ தேங்காய் பருப்பு கொண்டு வந்திருந்தனர். அவை ரூ.28,934க்கு விற்பனையானது.

---

### பரமத்தி வேலூர் சந்தையில் வாழைத்தார் விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி

பரமத்திவேலூர்: பரமத்தி வேலூரில் வாழைத்தார் விலை உயர்வால் விவசாயிகள், வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். நாமக்கல் மாவட்டம் பரமத்திவேலூர் தாலுகா ஜேடர்பாளையம், பாண்டமங்கலம், பரமத்தி வேலூர், நல்லூர், பொத்தனூர், பொத்தனூர், நன்செய் இடையாறு, குப்புச்சிபாளையம், பாலப்பட்டி, மோகனூர், ஒருவந்தூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் பூவன், பச்சைநாடன், கபூரவள்ளி, மொந்தன், ரஸ்தாளி, உள்ளிட்ட பல்வேறு ரக வாழை மரங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

இதேபோல் இங்கு விளையும் வாழைத்தார்களை விவசாயிகள் வேலூரில் செயல்பட்டு வரும் தினசரி சந்தைக்கு ஏலத்திற்கு கொண்டு வருகின்றனர். இங்கு ஏலம் எடுப்பதற்காக கரூர், திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல், சேலம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் வந்திரந்து ஏலம் எடுக்கின்றனர். அவர்கள் இங்கிருந்து கர்னாடகா, ஆந்திரா, கேரளா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கும், சென்னை, பெங்களூரு உள்ளிட்ட பெரு நகரங்களுக்கும் லாரிகள் மூலம் அனுப்பி வைக்கின்றனர்.

இந்நிலையில், கடந்த வாரம் நடைபெற்ற வாழைத்தார் ஏலத்தில் பூவன்தார் ஞி 450க்கும், பச்சை நாடன் ஞி 500க்கும், மொந்தன் ஞி 600க்கும், கற்பூர வள்ளி ஞி 400க்கும், ரஸ்தாளி ஞி 400க்கும் ஏலம் போனது. நேற்று நடந்த ஏலத்தில் பூவன்தார் ஞி 500க்கும், பச்சை நாடன் ஞி 600க்கும், மொந்தன் ஞி 700க்கும், கற்பூர வள்ளி ஞி 500க்கும், ரஸ்தாளி ஞி 500க்கும் ஏலம் போனது.

இதில் கடந்த வார விலையை ஒப்பிடுகையில் வாழைத்தார் விலை ஞி50 முதல் ஞி 100வரை

அதிகரித்துள்ளது. உற்பத்தி குறைந்துள்ள நிலையில் தேவை அதிகரித்துள்ளதால் வாழைத்தார் விலை உயர்ந்துள்ளது. மேலும் வரும் நாட்களில் சதுர்த்தி திருவிழா வர உள்ளதால் விலை மேலும் அதிகரிக்க கூடும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர். வாழைத்தார் விலை உயர் வால் விவசாயிகள், வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

---

## 10 ஆயிரம் ஹெக்டேரில் விதை நடவு கருவி மூலம் நெல் நடவு செய்ய திட்டம்

ராமநாதபுரம்: விதை நடவு கருவி மூலம் ராமநாதபுரம் மாவட்டத்தில் 10 ஆயிரம் ஹெக்டேரில் முன்பருவ நெல் விதைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என வேளாண்மை துறை அதிகாரி தெரிவித்தார். ராமநாதபுரம் மாவட்டத்தில் 1 லட்சத்து 30 ஆயிரம் ஹெக்டேரில் முன்பருவ நெல் விதைப்பு செய்யப்படுகிறது. பருவமழையை நம்பி விதைக்கப்படும் நெல் ரகங்களில் அதிக விளைச்சலை தரும் தரமான விதைகளை பயன்படுத்த வேளாண்மை துறை விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கி வருகிறது. விதைக்கும் கருவி மூலம் மானாவரி நெல் விதைப்பு செய்வதற்கு விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது. மேலும் விதைப்புக்கு பயன்படுத்தும் டிராக்டர் ஓட்டுவதற்கு பயிற்சியும் அளிக்கப்படுகிறது. இது தொடர்பான பயிற்சி விளக்கம் திருவா டனை அருகே உள்ள கல்லூர் கிராமத்தில் நேற்று நடந்தது. ஆர்எஸ்.மங்கலம், திருவாடனை, ராமநாதபுரம், திருப்புல்லாணி ஆகிய வட்டாரங்களை சேர்ந்த 50 விவசாயிகள் இந்த பயிற்சியில் கலந்து கொண்டனர். கோவை வேளாண் கருவிகள் துறைத் தலைவர் தாஜுன், வேளாண் அறிவியல் மைய ஒருங்கிணைப்பாளர் துரைசிங், வேளாண் துணை இயக்குனர்கள் அரி வாசன், சுப்பிரமணியன், உதுமான் முகைதீன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். பயிற்சி குறித்து வேளாண்மை இணை இயக்குனர்(பொ)சௌந்திராஜன் கூறுகையில், "ராமநாதபுரம் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு கலெக்டரின் ஆலோசனையின் பேரில், விதைப்பு கருவி மூலம் விதைப்பது குறித்த பயிற்சி அளிக்கப்படுகிறது. 50 பேர் தேர்வு செய்யப்பட்டு ராமநாதபுரம் வேளாண்மை அறிவியல் மையத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது. நடப்பு ஆண்டு 10 ஆயிரம் ஹெக்டேரில் முன்பருவத்தில் விதைப்பு கருவி மூலம் நெல் விதைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாவட்டத்தில் நெல், சிறுதானியங்கள் மற்றும் பயறு வகைகள் 4 லட்சத்து 41 ஆயிரத்து 400 மெட்ரிக் டன் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சாதரண நெல் விதைப்புக்கு ஒரு ஏக்கருக்கு 30 கிலோ நெல் விதைகள் தேவைப்படும். இதுவே கருவி மூலம் விதைக்க 16 முதல் 20 கிலோ விதைகள் போதுமானது. இதன் மூலம் 20 சதவீதம் கூடுதல் மகசூல் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

---

## தென்னைநார் கழிவுகளை உரமாக பயன்படுத்த வேளாண் துறை ஆலோசனை

ராமநாதபுரம்: மண் வளம் பாதுகாக்க தென்னை நார் கழிவுகளை உரமாக பயன்படுத்த வேண்டும் என வேளாண் அறிவியல் பேராசிரியர் துரைசிங் தெரிவித்தார்.

தென்னைநார் கழிவில் இருந்து இயற்கை உரம் தயாரிப்பது குறித்து திருப்புல்லாணி அருகே தினைக்குளம் கிராமத்தில் செயல்விளக்கம் நடந்தது. உதவி பேராசிரியர் மீனாட்சி, முனைவர் ஆனந்த் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர். நிகழ்ச்சியில் வேளாண் அறிவியல் நிலைய பேராசிரியர் துரைசிங் பேசியதா வது: ராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு லட்சத்து 26 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நெல், 26 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் மிளகாய், 8 ஆயிரம் ஹெக் டேரில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது. இயற்கை கழிவு பொருட்களை மீண் டும் மண்ணில் சேர்ப்பதால் மண்ணின் தன்மை மேம் பட்டு, விவசாயத்திற்கு உதவும். விதைப்புக்கு முன்னர் இயற்கை உரங்களை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும். தென்னை நார் கழிவுகளில் இருந்து நல்ல உரம் தயாரிக்கலாம். நார் கழிவுகள் பிற மாவட்டங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கும் விற்பனை செய்யப்படுகிறது. தென்னை நார் பிரித்து எடுக்கும்போது கிடைக்கும் கழிவுகளில் அதிக விகிதத் தில் கரிமம் மற்றும் தழை சத்துக்கள் உள்ளன. எனவே தென்னை நார் கழிவுகளை நேரடியாக உரமாக பயன்படுத்த முடி யாது. இவற்றை எளிய முறையில் மட்க வைத்து உரமாக பயன்படுத்தலாம்.

ஒரு டன் நார் கழிவினை மட்க வைக்க 1.5 கிலோ ப்ளியூரோட்டடஸ் பூஞ்சை மற்றம் 5 கிலோ யூரியா தேவைப்படும். ஒரு டன் நார் கழிவுகளை 4 அடி நீளம் 3 அடி அகலத்தில் பரப்பி லேசாக தண்ணீர் தெளிக்க வேண்டும். இந்த அடுக்கு மீது ஒரு கிலோ யூரியா தூவ வேண் டும். இதன் மீது மீண்டும் 100 கிலோ நார் கழிவுகளை பரப்பி ப்ளியூரோட்டடஸ் பூஞ்சை 300 கிராம் தூவ வேண்டும். இவ்வாறு 1 டன் நார் கழிவுகளை யூரியா, ப்ளியூரோட்டடஸ் என்று மாற்றி, மாற்றி 10 அடுக்குகளாக அமைக்க வேண்டும். அடுக்குகளுக்கு தினமும் தண்ணீர் தெளிக்க வேண் டும். 15 நாட்களுக்கு ஒரு முறை இதனை கிளறிவிட வேண்டும். 60 நாட்களுக்கு பிறகு இது மட்கி, லேசான கருமை நிறமாக உரமாக மாறி விடும். இந்த உரத்தை ஹெக்டேருக்கு 5 டன் என்ற அள வில் பயிர்களுக்கு பயன்படுத்தலாம். இது மண்ணில் உள்ள நுண்ணுயிர்களின் எண்ணிக்கை, ஈரத்தன் மையை அதிகரிக்க செய் யும். இதன் மூலம் மண்வளம் பாதுகாக்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

---

## மண்வளம் பாதுகாக்க தென்னைநார் கழிவுகளை உரமாக பயன்படுத்த வேண்டும்

## வேளாண் துறை ஆலோசனை

செப்.15 முதல் நெல் விதைப்பு பணி துவக்கம் 3,116 மெட்ரிக் டன் உரம் இருப்பு வைக்க நடவடிக்கை

ராமநாதபுரம், : ராமநாதபுரம் மாவட்டத்தில் செப்டம்பர் 15 முதல் நெல் விதைப்பு பணி துவங்க உள்ளது. இதனால் இம்மாதம் 3 ஆயிரத்து 116 மெட்ரிக் டன் உரம் இருப்பு வைக்க வேளாண் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். ராமநாதபுரம் மாவட்டத்தில் மொத்த சாகுபடி பரப்பில் 70 சதவீதம் நெற்பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. 1.30 லட்சம் ஹெக்டேர் பரப்பில், 74 ஆயிரம் ஹெக்டேரில் வடகிழக்கு பருவ மழையை எதிர்பார்த்து செப்.15 முதல் விதைப்பு பணி துவங்க உள்ளது.

மாவட்டத்தில் இந்த ஆண்டு 45 ஆயிரத்து 520 மெட்ரிக் டன் உரம் தேவை என கணக்கிடப்பட்டுள்ளது. இவற்றில் கூட்டுறவு சங்கங்களின் மூலம் 8 ஆயிரம் மெட்ரிக் டன் யூரியா, டிஏபி 2 ஆயிரத்து 800 மெட்ரிக் டன், பொட்டாஷ் 200 மெட்ரிக் டன், கலப்பு உரங்கள் 4 ஆயிரம் மெட்ரிக் டன் என மொத்தம் 15 ஆயிரம் மெட்ரிக் டன்னும், உரிமம் பெற்ற தனியார் உர விற்பனையாளர்கள் மூலம் 35 ஆயிரத்து 520 மெட்ரிக் டன்னும் உர விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மாதந்தோறும் தேவைக்கு ஏற்ப உரம் இருப்பு வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கலெக்டரின் உத்தரவுப்படி வேளாண்மைத்துறை, கூட்டுறவுத்துறை, டான்பெட் ஆகிய துறைகளுடன் ஒருங்கிணைந்து, மாவட்டத்திலுள்ள 131 தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களிலும் உரங்கள் இருப்பு வைக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இம்மாதம் 3 ஆயிரத்து 116 மெட்ரிக் டன் உரம் இருப்பு வைக்க வேளாண் துறை அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர். இந்த மாதம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் ஆயிரத்து 148 மெட்ரிக் டன் உரங்களும், தனியார் உர விற்பனை கடைகளில் ஆயிரத்து 968 மெட்ரிக் டன் உரங்களும் இருப்பு உள்ளன. எனவே விவசாயிகள் வேளாண் அலுவலர்களின் அறிவுரைப்படியும் அல்லது மண் பரிசோதனை ஆய்வு முடிவுகளின்படியும் உரங்கள் இட கேட்டுக் கொள்ளப்படுகிறது. தனியார் உர விற்பனையாளர்கள் கடைகளில் இருப்பு விபரத்தை தகவல் பலகையில் விவசாயிகளுக்கு தெரியும் வண்ணம் எழுதி வைக்க வேண்டும். விற்கும் உரங்களுக்கு ரசீது வழங்க வேண்டும். உரக்கட்டுப்பாட்டு சட்டத்தை மீறும் தனியார் உர விற்பனையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என ராமநாதபுரம் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர்(பொ) சவுந்தரராஜன், தரக்கட்டுப்பாடு வேளாண்மை உதவி இயக்குநர் சேக்அப்துல்லா ஆகியோர் தெரிவித்துள்ளனர்.